www.padippakam.com


# புதிய சமதர்மம்

පුදිය සමධර්මම්

PUTHIYA SAMADHARMAM

இதழ் - 30 | ஆகஸ்ட் 2000 | விலை : ரூபா 10.00


**சிறுகதை**



**ஒரு இரயில் நிலையத்தின் கதை**

# நாடு தழுவிய போராட்டம்

வலிமை பெற்று வரும் தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தை தென் இலங்கையில் முதன்மைப்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான முக்கிய கூட்டம் நவசமசமாஜக் கட்சி தலைமை பணிமனையில் நடைபெற்றுள்ளது.

நவசமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி அணி, முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே இத்தகைய முடிவுக்கு வந்துள்ளன. இக்கட்சிகளின் பிரதிநிதிகளான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின, வாசுதேவ நாணயக்கார, முஜிபூர் ரகுமான், மனோகணேசன், ஆகியோர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அடிப்படைக் கோரிக்கைகள் அடங்கிய ஆவனத்தை மனோகணேசன் முன்வைத்துள்ளார். இதற்குப் பல தமிழ் அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. நவசமசமாஜக் கட்சியும், முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியும் பேராதரவு தெரிவித்துள்ளன. ஜனநாயக இடதுசாரி அணி மேற்படி ஆவனத்தை ஆராய்ந்து முடிவு எடுப்பதாக அறிவித்துள்ளது. ஆனால் அவர்கள் இதை ஏற்பார்கள் என்றே நம்பப்படுகிறது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கோரிக்கைகளை சிங்கள மக்கள் முன் கொண்டு செல்ல முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசால் முன்வைக்கப்பட்டு இருக்கும் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் நிராகரிக்கப்படுகிறது. எமது கோரிக்கைகள் உள்ளடக்கப்படாதவரை எந்த அரசியல் திட்டத்திலும் எத்தகைய பலனும் இல்லை என இவர்கள் கூறுகின்றார்கள்.

புதிய இடதுசாரி முன்னணி, முதலாளித்துவ எதிர்ப்பு அடிப்படைக் கொள்கை ரீதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும், ஜனநாயக இடதுசாரி முன்னணியையும் ஏற்றுக் கொள்கிறது. எதிர்காலத்தில் தென் இலங்கையில் நடைபெறும் போராட்டங்கள் யாவற்றிலும் தமிழ் மக்களின் நியாய பூர்வ கோரிக்கைகள் முன் வைக்கப்படும்.

# தமிழர் தாயகத்தை நாசமாக்கும் தீர்வுத் திட்டம்

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன




# சிங்கள பௌத்த தலைவர்களின் துரோகங்கள்



www.padippakam.com





# வடக்கு கிழக்கில் அதிகரித்து வரும் பாலியல் வல்லுறவுகள்

தமிழ் பெண்கள் மீதான இலங்கை இராணுவத்தின் பாலியல் துன்புறுத்தல்கள், மிக நீண்ட நாட்களாகவே இடம் பெற்று வருகிறது. இடையே இந்திய படையினர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த போதும் பெருமளவு பாலியல் வல்லுறக் கொடுமைக்கு தமிழ் பெண்கள் ஆளாக்கப்பட்டனர். மீண்டும் இலங்கை இராணுவம் வடக்கு, கிழக்கு பகுதிக்குள் நுழைந்தவுடன் பாலியல் வல்லுறவுகளும் அதிகரித்த நிலை காணப்படுகிறது.

கிரிசாந்தி, இரஜனி, கோணேஸ்வரி, கமலிட்டாவுக்கு நிகழ்ந்த பரிதாப மரணங்களை தமிழ் நெஞ்சங்கள் மறந்து விடவில்லை. கிரிசாந்தி விடயத்தில் பொது அமைப்புகள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக இலங்கை அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்வது போல் செயற்பட்டது. ஆனால் இன்று அந்த பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்ட குற்றத்தைப் புரிந்தவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஒரு குற்றமும் செய்யாமல் இலங்கையின் பல சிறைகளில் வருடக்கணக்கில் வாடும் தமிழ் மக்கள் பலர் இன்றும் உள்ளனர். நாகரீக உலகை வெட்கித் தலை குனிய வைக்கும் செயலில் ஈடுபட்டவர்களுக்கு இன்று பிணை வழங்கப்பட்டுள்ளது. கோணேஸ்வரி ஏழையாக இருந்தமையால் விடயம் பெரிய அளவில், எடுபடாமல் போய் விட்டது. கமலிட்டா சொத்துக்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இதைச் செய்தது இலங்கை இராணுவத்தினர். கடந்த யூலை 14ம் தேதி அல்வாய் மாலிச் சந்தி சோதினைச் சாவடியில் பாடசாலை மாணவி ஒருவரை இராணுவத்தினர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இங்ஙனம் பாலியல் வல்லுறவுக் குற்றங்களை புரிபவர்களை கைது செய்வதும், பின்பு விடுதலை செய்வதும் இலங்கையில் சாதாரணமாகி விட்டது. வடக்கு, கிழக்கில் இருந்தால், பல்வேறு தொல்லைகள் வருகிறது. இந்தியாவுக்கு தப்பிச் செல்வோம் என நினைத்தால், இப்போது அதிலும் பிரச்சினை தோன்றியுள்ளது. அண்மையில் பகுதிகளில் யுத்தத்தின் காரணத்தினால் குடும்பத்தலைவரை இழந்த பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இலங்கை அரசை பொறுத்தவரையில் யுத்தத்தை வெல்வதே குறிக்கோளாக இருக்கிறது.

இதற்காக கொடிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறது. வடக்கு, கிழக்கில் நடைபெறும் கொடிய செய்திகளை மறைக்கிறது. எத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு யுத்த முனைக்கு அனுப்பப்படுகின்றனர்.

தென் இலங்கையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு

விடயமும் ஊசலாடிக் கொண்டு இருக்கிறது.

தற்போது பாலியல் வல்லுறவுகள் வடக்கு, கிழக்கில் அதிகரித்த நிலை காணப்படுகின்றது. பாலியல் வல்லுறவில் ஈடுபடும் ஆயுதப் படையினர், வயது முதிர்ந்த தமிழ் பெண்களைக் கூட தமது இலக்குக்கு ஆளாக்கும் நிலை தோன்றியுள்ளது. யுத்தத்தின் கோரத்தால் எதுவும் செய்யலாம் என்ற நிலை உள்ளது. வவுனியா பூந்தோட்ட பகுதியில் 8 வயது சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

வடமாராட்சிப் பகுதியில் 80 வயது மூதாட்டியைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி உள்ளனர். நீர்வேலியில் கரந்தின பகுதியில் 70 வயது மூதாட்டி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி விட்டு, அவரது

இந்தியாவுக்குச் தப்பிச் சென்ற குமுதினி என்ற இளம் பெண்ணை இந்திய மீனவர்களே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி விட்டு, படுகொலை செய்துள்ளனர். தற்போது மேரி வனிதா என்ற தமிழ் பெண் இந்தியா தப்பிச் சென்ற போது இந்திய மீனவர்களால் கடலில் தூக்கி வீசப்பட்டமையால் தனது 7 வயது மகனைப் பறிகொடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இன்று தொழில் இல்லை. போதிய உணவுப் பொருட்கள் இல்லை, மருத்துவ வசதிகள் இல்லை, இவற்றுடன் ஆயுதபடையினரின் பாலியல் வல்லுறவுக் கொடுமைகளும் அதிகரித்துள்ளன. இதைவிட இந்திய மீனவர்களின் செயற்பாடும் வேறு கோணத்தில் காணப்படுகிறது. வடக்கு, கிழக்குப்

வருபவர்கள், இராணுவத்தி
இருந்து தப்பி ஓடியவர்களே எ
பது எல்லோருக்கும் தெரியு
புதிதாக இராணுவத்தில் ஆ
களைச் சேர்ப்பதிலும் அரசு
குத் தோல்வியே ஏற்பட்டுள்ள

அரசு நினைத்தது போ
எவரும் முன்வந்து இராணுவ
தில் சேரவில்லை. அரசுக்
இப்போது இருப்பது ஒ
வழிதான். அது இராணுவத்தி
இருந்து தப்பியோடியோன
துரத்தி பிடித்து இராணுவத்தி
சேர்ப்பதுதான்.

எனவே பல்வேறுபட்ட சமூ
விரோதச் செயல்களில், ஈடுப
டவர்கள், தற்போது வடக்
கிழக்குப் பகுதிகளில் இராணு
நடவடிக்கைகளில் ஈடுபட்டு வ
கின்றனர். இவர்களே ஈவி
க்கமற்ற முறையில் பாலிய
வல்வுறவுகளில் ஈடுபடுகின்றன

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளி
அமைப்பில் அனேக பெ
போராளிகள் உள்ளனர். அவ
களுள் தற்கொலைப் பெ
போராளிகள் பலரும் உள்ளன
வீட்டை விட்டு வெளியே எட்டி
பார்க்காத தமிழ்ப் பெண்கே
அதிகம் வடக்கு, கிழக்கி
வாழ்ந்தனர். திருமணம் கூ
தாய், தந்தையர் நிச்சயி
பதையே செய்து கொண்டன
வீடுகளைச் சுற்றி பெரி
வேலிகள் அமைக்கப்பட்
அதன் நடுவே பெ
பிள்ளைகள் வாழ்ந்தனர். இ
சரியா, பிழையா என நா
வாதிக்கவில்லை. ஆனா
இவ்வளவு கட்டுப்பாட்டுடன் இ
ந்த தமிழ் பெண்கள், எங்ஙன
விடுதலைப் போராளிகளா
மாறினர். குண்டுகளை உடலி
சுமந்து சிதறி சாவை வ
வழைக்க எப்படி துணிந்தன
இவை சிங்கள பௌத்த பேரி
வாதிகளுக்கு விளங்காம
இருக்குமா? இன்று வடக்
கிழக்கில், நிலவும் உணவு ப
றாக்குறை, மருத்துவ பற்றா
குறை என்பவற்றை விட, பா
யல் துன்புறுத்தலே மிகப் பெரி
விடயமாக உள்ளது.

(பற்றிமா

# நட்டஈடுகளிலும் பாரபட்சம்

மறைந்த கைத்தொழில் அமைச்சர் சீ. வி. குணரத்தினாவின் குடும்பத்திற்கு 50 லட்சம் ரூபாயை வழங்கப் போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இவ் அறிவிப்பை காணாமல் போன படைவீரர்களின் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. இராணுவ வீரர்கள் போரில் இறக்கும் போது குடும்பத்தர் ஆயின் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தனி நபராயின் 75 ஆயிரம் ரூபாயுமே வழங்கப்படுகிறது. அமைச்சருக்கு ஒருவிதமாகவும், போரில் இறக்கும் இராணுவ வீரர்களுக்கு வேறுவிதமாகவும் வழங்கப்படுவதை இச்சங்கம் கண்டித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் நஷ்டஈடு வழங்குவதில் அமைச்சர்மாருக்கு ஒருவிதமாகவும், இராணுவ வீரர்களுக்கு வேறுவிதமாகவும் செயற்படுவது கண்டிக்கத்தக்க விடயமே. உயிர்கள் என்பது எல்லோருக்கும் பெறுமதியானதே. தென் இலங்கையைப் பொறுத்தவரையில் பாரபட்சமாக என்றாலும் அரசாங்கம் நஷ்டஈடு வழங்குகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றால் நஷ்டஈடு கிடைப்பதில் பெரும் சிரமமே. மக்கள் இடம்பெயர்வின் போதும், தென் இலங்கை மக்களுக்கு ஒருவிதமாகவும், வடக்கு கிழக்கு மக்களுக்கு வேறு விதமாகவுமே அரசாங்கம் நிவாரணம் வழங்கியது. சொற்ப காலத்துக்கு முன்பு ஒட்டி சுட்டான் பகுதியில் விமானக் குண்டு வீச்சினால் மரணமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் எவ்வளவோ பின்னடித்தது என்பது யாவருக்கும் தெரியும். ஆனால் இதே காலப் பகுதியில் தென் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு உடனடியாகவே, நஷ்டஈடு செலுத்தப்பட்டது. தென்பகுதிக்கு உடனடியாகவே அமைச்சர் ஒருவர் அனுப்பப்பட்டு அவர்களுக்கு அந்தச் சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியிலேயே நஷ்டஈடும் கொடுக்கப்பட்டது. இதே போல் வவுனியா பகுதியில் போரின் அச்சத்தால் இடம் பெயர்ந்தவர்களில், சிங்கள மக்களுக்குப் பல்வேறு ஸ்தாபனங்கள் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டது. ஆனால் இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு எத்தகைய நிவாரணமும் உடனடியாக வழங்கப்படவில்லை.

எனவே பராபட்சம் என்பது இலங்கை அரசியல் தலைவர்களின் இரத்தத்தில் ஊறிப் போய் உள்ளது..பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களாயின் நஷ்டஈடு என்ற பேச்சுக்கே முதலில் இடம் இருக்காது. சிங்கள மக்களாயின் அதுவும் ஏழைகளாயின் நஷ்ட ஈட்டில் பாரபட்சம் காட்டப்படும்.

## இலவச சட்ட ஆலோசனைகள்

எமது அமைப்பு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கி வருகின்றது
முக்கியமாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக சட்டம் சம்பந்தமா
இலவச ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொட பில் - பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வழக்குகள்
2. குடும்பப் பிரச்சினைகள் - விவாகரத்துப் பெற்றுக் கொள்ளுதல் பராமரிப்புப் பணம் பெற்றுக் கொள்ளுதல்
3. பிள்ளைகளைத் தத்தெடுத்தல்
4. மரணமடைந்தவருடைய சொத்துக்களை உரிமையாளர்கள் பிரித்தெடு தல் தொடர்பான வழக்குகள்
5. விபத்துக்கள் தொடர்பான நட்டஈட்டுக் கோரிக்கைகள் மற்றும் கள கொள்ளைகள் தொடர்பான பிரச்சனைகள்
6. கடத்தல், பயமுறுத்தல், கற்பழிப்பு மற்றும் பாலியல் தொடர்பான பிர சனைகள்
7. குத்தகை மற்றும் வாடகைக்கு இருப்பவர்களுக்கும் வீட்டு உரிமையாள களுக்கும் இடையிலான பிரச்சினைகள்

வாரநாட்களில் மாலை 4.30 தொடக்கம் 6.30 வரை எமது அலுவலக
திறந்திருக்கும். சந்திக்கும் நேரத்தை முன்னதாகவே உறுதிப்படுத்துவதற்கு
மேதிக விபரங்களுக்கும் மற்றும் ஏனைய தொடர்புகளுக்கும் தொடர்பு கொள்
வேண்டிய தொலைபேசி இல. 077-303813

அலுவலகம் : மனித உரிகளுக்கான குரல், இல 385 2/4, (2ம் மாடி), காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6.

படிப்பகம்

www.padippakam.com



# 20000 தமிழ் இளைஞர்கள் யுவதிகள் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போய் அல்லது கொல்லப்பட்டு உள்ளனர்

## - ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி

கடந்த 6ம் தேதி பாராளுமன்றத்தில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர், பரராஜசிங்கம் உரையாற்றும் போது, கடந்த 28 வருடகால அவசரகால ஆட்சியின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 20.000 இற்கும், மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போய் உள்ளனர் அல்லது கொலை செய்யப்பட்டு உள்ளனர் என பதிவுகளில் இருந்து தெரிய வருவதாக குறிப்பிட்டிருந்தார்.

அவசரகாலச் சட்ட விவாதத்தின் போதே இதை அவர் தெரிவித்திருந்தார். பரராஜசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழுவினால், வெளியிடப்பட்ட அறிக்கையில், உலகளாவிய மனித உரிமை மீறல் வரிசையில், ஈராக்கிற்கு அடுத்ததாக இலங்கையையே குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது உலகில் மனித உரிமை மீறல் புரியும் நாடுகள் வரிசையில் இலங்கை இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில், இந்த நாட்டில் ஏனைய சட்டங்களிற்கு அப்பாற்பட்ட முறையில், விசேட அவசர கால விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இச்சட்டங்களில், ஒன்று தான் 1979ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட பயங்கரவாதத் தடைச்சட்டமாகும்.

இவ்வாறான சட்டங்களின் மூலம், படையினருக்கு அதிகளவு அதிகாரத்தினை அரசு வழங்கியுள்ளது. மக்களை கண்டபடி கைது செய்தல், தடுத்து வைத்தல், சித்திரவதை செய்தல், தாங்கள் விரும்பிய இடங்களில் படையினர் சோதனை செய்தல், போன்ற சட்ட விரோதமான காரியங்களைச் செய்ய படையினருக்கு இச் சட்டங்கள் அதிகளவு அதிகாரம் வழங்கியுள்ளன. இதன் காரணமாக கடந்த 28 வருட காலத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு எதிராக படையினரால் ஏராளமான மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன. 1972ம் ஆண்டு முதல் இன்று வரை இந்த நாடு அவசர காலச் சட்டத்தின் கீழேயே ஆளப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழர்களுக்கு ஜனநாயக வழி முற்றாக மறுக்கப்பட்டு உள்ளது. கடந்த 28 வருட அவசர கால ஆட்சியின் கீழ் 20,000 இற்கும் அதிகமான தமிழ் இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டு உள்ளனர் அல்லது காணாமல் போய் உள்ளனர் என்பதோடு, அவசர காலச் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ் ஏறத்தாழ 1500 தமிழ் இளைஞர்கள் இலங்கைச் சிறைகளில் தடுப்பு முகாம்களில் 4, 5 வருடங்களுக்கு மேலாக விசாரணையோ அல்லது விடுதலை இன்றியோ தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

# கொம்பனிவீதி பொலிசும் வாசுகியும்

கடந்த 18-07-2000ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் கொம்பனி வீதியில் அமைந்திருக்கும் கங்காராம பொலிஸ் சோதனை முகாமில் வைத்து வாசுகி என்ற தமிழ் பெண் கைது செய்யப்பட்டார். இப்பெண் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் நவசமாஜக் கட்சி அரசியல் குழு உறுப்பினர் வ. திருநாவுக்கரசின் மகள் ஆவார். பரிசோதனையின் போது வாசுகி தனது அடையாள அட்டையைப் பொலிசாரிடம் காட்டியுள்ளார். சந்தேகம் கொண்ட பொலிசார் நீண்ட நேரம் விசாரணை செய்துள்ளனர். இறுதியில் வாசுகி தன்னைக் கொம்பனி வீதி பொலிஸ் நிலையம் கொண்டு போகும்படி கோரியுள்ளார். கொம்பனிவீதி பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற பொலிசார் பொலிஸ் நிலையத்தில் வாசுகி சம்பந்தமாக மிக நீண்ட முறைப்பாடு ஒன்றை எழுதியுள்ளனர். இதன் பின்பு முறைப்பாட்டில் கையொப்பம் இடுமாறு வாசுகியை வற்புறுத்தியுள்ளனர். முறைப்பாடு சிங்களத்தில் இருப்பதால் தன்னால் கையொப்பம் இட முடியாது என வாசுகி மறுப்புத் தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பொலிசார் பல்வேறு கெட்ட வார்த்தைகளால் ஏசியுள்ளனர். இதனைவிட வாசுகி அணிந்திருந்த நகைகளைக் கழற்றுமாறு வற்புறுத்தியுள்ளனர். வாசுகி அண்மையில் திருமணம் செய்திருந்ததால், அவரது கழுத்தில் சங்கிலியுடன் தாலி இருந்தது. அதையும் கழற்றுமாறு பொலிசார் பணித்துள்ளனர். தாலியை கழற்ற வாசுகி மறுப்புத் தெரிவித்துள்ளார். இதனால் கடுங்கோபம் கொண்ட பொலிசார் அடிப்பதற்காக இரண்டு தடிகளுடன் வாசுகியை சுற்றிவளைத்து அச்சுறுத்தியுள்ளனர். பொலிசாரின் துன்புறுத்தலை பொறுக்க முடியாத வாசுகி தாலியையும் கழற்றிக் கொடுத்துள்ளார். தான் கைது செய்யப்பட்டது தொடர்பாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் கதைக்க வேண்டும் என்று பொலிசாரிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் பொலிசார் அதற்கும் அனுமதிக்கவில்லை. தான் கைது செய்யப்பட்டது தொடர்பாக, தனது வீட்டுக்கு அறிவிக்கும்படி பொலிசாரிடம் கேட்டிருந்தார். இதற்கும் பொலிசார் இடம் கொடுக்கவில்லை. இந்நிலையில் பொலிஸ் நிலையம் வந்திருந்த தமிழ் முதியவர் ஒருவர் மூலம் நவசமாஜக் கட்சி காரியாலயத்திற்கு தகவல் அனுப்பியிருந்தார்.

தகவலறிந்த நவசமாஜக் கட்சியினர் இரண்டு அரசியல் குழு உறுப்பினர்களைப் பொலிஸ் நிலையம் அனுப்பினர். இவர்கள் வாசுகியை சந்தித்து பேசியதுடன், வாசுகி தொடர்பாக பொலிசாரிடம் விசாரித்து உள்ளனர். ஒரு மணித்தியாலத்தில் விடுதலை செய்வதாக பொலிசார் முதலில் தெரிவித்திருந்தனர். ஒரு மணித்தியாலத்தின் பின்பு புலனாய்வு அறிக்கை கிடைத்த பின்பு தான் விடுதலை செய்ய முடியும் என நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி. விக்கிரமபாகுவிற்கு தகவல் கொடுக்கப்பட்டது. தோழர் விக்கிரமபாகு, உடனடியாக பிரதி பொலிஸ் மா அதிபர் போதிலியனகேயுடன் தொடர்பு கொண்டு உண்மை நிலையை விளக்கிக் கூறியிருந்தார். பொலிஸ்மா அதிபர் உடனடியாக வாசுகியை விடுதலை செய்யுமாறு பணிப்புரை வழங்கியதைத் தொடர்ந்து வாசுகி விடுதலை செய்யப்பட்டார்.

வாசுகி கைது தொடர்பாக பல அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளது. முதலாவதாகத் தமிழ் தெரிந்த பொலிசார் வாசுகியை விசாரிக்கவில்லை. இரண்டு, பொலிசார் முறைப்பாடு தமிழில் எழுதப்படாதது. வாசுகியை கட்டாயமாக கையொப்பம் இடுமாறு வற்புறுத்தியமை. மூன்று வாசுகி கைது செய்யப்பட்டமை தொடர்பான தகவல்களை வீட்டுக்குத் தெரிவிக்காது விட்டமை. இதைவிட வாசுகியைக் கெட்ட வார்த்தைகளால் மிரட்டியதுடன், தமிழ் பெண்கள் மிகவும் பெரிதாக மதிக்கும் தாலியைக் கழற்றுமாறு கொச்சை வார்த்தைகளால் கேலி செய்தமை. வாசுகி திருநாவுக்கரசு மிக முக்கிய அரசியல் பிரமுகரின் மகள் என்ற படியாலும், பிரதான அரசியல் கட்சியின் நிர்ப்பந்தத்தாலும் விடுதலை செய்யப்பட்டார். இதே போல் எதுவித தொடர்பும் இல்லாத அப்பாவி தமிழ் பெண் பிரஜை ஒருவர் இதே சூழ்நிலையில் சிக்கியிருந்தால், என்னவாகியிருக்கும். வெளியே தெரியாமல் எத்தனையோ சம்பவங்கள் மறைக்கப்பட்டுள்ளன. தமிழ் பெண்களைக் கைது செய்வது மானபங்கப்படுத்துவது என்பன எல்லாம் சாதாரண விடயமாகி விட்டது.

பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நிலைமையை விளங்கியதால் வாசுகி விடுதலையானார். இங்ஙனம் எல்லா தமிழ் பெண்களும் பிரதி பொலிஸ் மா அதிபரை தொடர்பு கொள்ள முடியுமா? தொடர்பு கொள்ள தெரியுமா? பொலிஸ் அடாவடித்தனத்தின் வெளிப்பாட்டை வாசுகி மூலம் உலகம் புரிந்து கொண்டது.

# கொழும்பு சாகிராக் கல்லூரி நலனுக்காக போராடியவர்கள் கைது

கொழும்பு சாகிரா கல்லூரிக்கும் கல்லூரிக்கு அருகே இருக்கும் பள்ளிவாசலுக்கும் சொந்தமான காணியொன்றில் கட்டிடம் அமைக்கும் முயற்சி நடைபெற்றுள்ளது. இக்கட்டிடத்தை அமைப்பதற்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். பாடசாலை நிர்வாகம் பாடசாலை நலனைக் கருத்திற் கொண்டு கட்டிடம் அமைக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தது. பள்ளிவாசல் நிர்வாகத்தில் அமைச்சர் அலவி மௌலானாவும் உள்ளார். வர்த்தக நடவடிக்கைக்கு கட்டிடம் அமைப்பதை மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் பெரியளவில் எதிர்த்து தமது எதிர்ப்புக்களைக் காட்டியிருந்தனர்.

கடந்த 14-07-2000ம் தேதி வெள்ளிக்கிழமைத் தொழுகை முடிந்து வந்த பொது மக்களால் புதிதாக அமைக்கப்பட்ட கடைத் தொகுதி தாக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் குற்றச்சாட்டு தற்போது முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் முஜிபூர் ரகுமான் மீது சுமத்தப்பட்டுள்ளது. பொலிசார் முஜிபூர் ரகுமானையும், ஏனைய சிலரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிபதி 10 ஆயிரம் ரூபாய் பிணையில் முஜிபூர் ரகுமானையும் ஏனையோரையும் விடுதலை செய்துள்ளார். வழக்கு அடுத்த மாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பள்ளி நிர்வாகத்தில் முக்கிய அரச பிரமுகர் இடம் பெற்றதால் தான் முஜிபூர் ரகுமான் கைது செய்யப்பட்டார் என பரவலாகப் பேசப்படுகின்றது. முஜிபூர் ரகுமான் முஸ்லிம் மக்களின் உரிமைக்காகவும், ஜனநாயக உரிமைக்காகவும் போராடி வரும் இளம் தலைவர். இவருக்கு மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் செல்வாக்கை பொறுக்க முடியாதவர்களே திட்டமிட்டு முஜிபூர் ரகுமானைப் பிரச்சினைக்குள் தள்ளியிருக்கலாம் என்று எல்லோராலும் பேசப்படுகிறது.

முஸ்லீம் மக்களின் அதி முக்கிய தினங்களுக்கான விடுமுறைக்காகவும், பல்வேறு விதங்களில் பாதிக்கப்படும் ஏழை இஸ்லாமிய மக்களுக்காகவும் போராடிவரும் துணிச்சல் மிக்க இளம் தலைவர் முஜிபூர் ரகுமான். மக்கள் ஆதரவு இவ்விளம் தலைவர் பக்கம் இருப்பதால் எத்தகைய சூழ்ச்சிகள், சதிகள் வந்தாலும் இவதின் வளர்ச்சியைத் தடுக்க முடியாது என்பதே பலரதும் கருத்தாகும்.

# தெஹிவளைப் பொலிசார் தமிழ் குடியிருப்பாளர்களைப் பதிவு செய்ய மறுப்பு

1997ம் ஆண்டு தொடக்கம் கவிதா சிறிசேகர் என்னும் தமிழ் பெண் தெஹிவளையில் இருந்து வருகிறார். இவரது பதிவு யூலை 27ம் திகதியுடன் முடிவடைகிறது. தனது டென்மார்க்கில் இருக்கும் கணவனிடம் போவதற்காக இப்பெண் தெகிவளையில் வசித்து வருகிறார். அண்மையில், இப்பெண் தனது பதிவைப் புதுப்பிக்குமாறு தெஹிவளைப் பொலிசாரிடம் கேட்டுள்ளனர். பொலிசார் பதிவு செய்ய மறுப்புத் தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக நவசமாசக் கட்சி பொதுச் செயலாளர் கலாநிதி. விக்கிரமபாகுவிற்கு இப்பெண் முறைப்பாடு செய்துள்ளார். விக்கிரமபாகு உடனடியாக தெஹிவளைப் பகுதி பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு பதிய மறுக்கும், காரணத்தைக் கேட்டுள்ளார். பொலிஸ் அத்தியேட்சகர் உடனடியாக தெகிவளை பொலிஸ் நிலையம் சென்று பதிவை மேற்கொள்ளுமாறும், இதற்கான உத்தரவை தான் பிறப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதைவிட தொல்லை தவிர்ப்புக் குழுவிற்கு மேற்படி பெண் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தும் தொல்லை தவிர்ப்புக் குழுவினரும், இப் பெண்ணின் வீட்டிற்கு சென்று விசாரணை நடத்தியபின் உடனடியாகச் சென்று பொலிசில் பதியுமாறு கூறியுள்ளனர்.

தெகிவளை பொலிசார் ஏன் இங்ஙனம் இப்பெண்ணை பதிய மறுத்தனர் என்பது புரியாத புதிராகவே உள்ளது. மேலிடம் சென்றவுடன் இப்போது பதியத்தான் போகின்றனர். ஏன் இந்த இழுத்தடிப்பு எதை எதிர்பார்க்கின்றார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் அச்ச நிலை

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கடந்த 7-7-2000ம் தேதியன்று இப்பல்கலைக்கழகத்தை சேர்ந்த சதாசிவம் சக்திவேல் என்ற பொறியியல் துறையின் 3ம் வருட மாணவன் வெள்ளை நிற வானில் வந்தோரால் கடத்தப்பட்டதன் பின்பு நிலைமை மேலும் சிக்கலாகியுள்ளது.

கடந்த மாதம் தற்கொலை குண்டு தாரியினால் அமைச்சர் சி. வி. குணரத்ன கொல்லப்பட்டதன் பின்பு, மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது, பல்வேறுபட்ட அச்சுறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. அமைச்சர் கொல்லப்பட்டவுடன் 7-6-2000ம் தேதி இரவு 7 மணிக்கு பல்கலைக்கழக வளாகத்தில் 59 மாணவர்களையும், சொய்சாபுர பகுதியில் 8 மாணவர்களையும் பொலிசார் கைது செய்தனர். இம் மாணவர்களை பொலிசார் கைது செய்த போது பெரும்பான்மை இன மாணவர்கள், பொலிசாருக்கு உதவிகள் புரிந்ததாகத் தெரிய வருகிறது.

தற்போது 2 மாணவர்களைப் பொலிசார் தடுத்து வைத்திருக்கின்றனர். 21.06.2000ம் தேதி அன்று கைது செய்யப்பட்ட பொன்னுத்துரை அல்பேட் என்ற மாணவனையும் 7.7.2000ம் தேதி அன்று சதாசிவம் சக்திவேல் என்ற மாணவனை வெள்ளை வானில் கடத்தியும் சென்றுள்ளனர். பிந்தி கிடைத்த தகவல்களின் படி இவ்விரு மாணவர்களும் பொலிசாரின் பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே வெள்ளை வானில் வந்து கடத்தியவர்களும் பொலிசாரே என்பது வெளிச்சமாகி உள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் 550 க்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்கள் உயர்கல்வி கற்கின்றனர். இவர்களில் அனேக மாணவர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இம்மாணவர்கள் இங்ஙனம் கண்டபடி கைதாகும் போது இவ்விடயம் பெற்றோருக்கு தெரிய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மொரட்டுவப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக விடுதிகளிலும், தனியார் வீடுகளிலும் இருந்தே கல்வி பயில்கின்றனர். இம் மாணவர்கள் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டால், அல்லது கடத்தப்பட்டால், மாணவர்களுக்கு ஆக செயல்படுவதற்கு யாரும் இல்லாத நிலை உள்ளது. கடந்த 20 வருட காலமாக நடைபெறும் யுத்தத்தின் காரணத்தினால், வடக்கு, கிழக்கு பகுதி மாணவர்கள் பல்வேறுபட்ட இழப்புகளை அனுபவித்து வருகின்றன. பொறியியல் பீடத்துக்குத் தெரிவாவது என்பது சாதாரண விடயமல்ல. எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியிலேயே இம் மாணவர்கள் இங்கு கல்வி பயில வந்துள்ளனர். புலிவேட்டைக்கு திரிபவர்கள் இம் மாணவர்களின் கல்வியில் விளையாடுவது வருந்தத்தக்க நிலையாகும். தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவர்களில் ஒருவர், ஆவணி மாதம் 16ம் தேதி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இங்ஙனம் சக மாணவர்கள் கைது செய்யப்படுவதால் அனைத்து மாணவர்களும், அச்ச உணர்வுடனேயே காலத்தைக் கழிக்கின்றார்கள்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இனவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் அதிகரித்த நிலை தென்படுகிறது. இதனால் தமிழ் மாணவர்களுக்கு எதிரான இனவாத செயற்பாடுகள் இப்பல்கலைக்கழகத்தில் அதிகரித்த வண்ணம் உள்ளன. கடந்த வருடம் தமிழ் மாணவர்கள் "சரஸ்வதி பூசை" நடத்தியுள்ளனர். இதைப் பொறுக்க முடியாத இனவாத மாணவர்கள், மேற்படி நிகழ்ச்சியை புலிகளுடன் தொடர்பு படுத்தி சுவரொட்டிகள் ஒட்டியுள்ளனர். பல்கலைக்கழக நிர்வாகமோ, அல்லது அரசாங்கமோ இனவாதிகளுக்கு எதிராக ஏதும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இதனால் இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதையும் செய்யலாம் என்ற நிலையில் உள்ளனர்.

தமிழ் மாணவர்கள் மீது பொதுஜன முன்னணி கை வைப்பது மிக நீண்ட காலமாகவே நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. 1970 களில் தமிழ் மாணவர்கள் மீது தரப்படுத்தல் புகுத்தப்பட்டதால், ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வியை இழந்தனர். இன்று யுத்தத்தினால், எண்ணற்ற மாணவர்கள் தமது கல்வியைக் கைவிட்டுள்ளனர். எஞ்சி இருப்பவர்களையும் பாதுகாப்புப் பிரிவினரும், இனவாத அமைப்புக்களும் பதம் பார்க்க திரிகின்றனர்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பல்வேறு துறைகளில் தமிழ் மாணவர்கள், உயர்கல்வி கற்கின்றனர். பொறியியல், டிப்போளாமா, நிலஅளவை, கட்டிட நிர்மாணம், போன்ற துறைகளில் தெரிவு செய்யப்பட்டே இங்கு வருகின்றனர்.

பொறியியல் துறையை வடக்கு, கிழக்கில் நிறுவுவதற்கு எத்தனையோ தரம் கோரிக்கை விடப்பட்டும், அதை அரசாங்கம் செயல்படுத்தவில்லை. இன்று தென் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு எத்தனையோ வசதிகளைச் செய்து கொடுத்திருக்கும் இவ்வரசு, வடக்கு, கிழக்கு தமிழ் மாணவர்களுக்காக எதையும் செய்து கொடுக்கவில்லை. அதே நேரம், எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் கொழும்பில் இருந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கும், பல்வேறு கோணங்களில் பிரச்சினைகளைக் கொடுக்கிறது.

தற்போது தென்பகுதியில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள், படும் துன்பங்களை வார்த்தைகளில் கூறமுடியாது. காலி வீதியில், பஸ் ஒன்றில் பயணம் செய்த தமிழ் மாணவன் பஸ்ஸுக்குள் தூங்கி விட்டான். பஸ்ஸை வழியில் பரிசோதனை செய்த இராணுவத்தினர் நித்திரையில் இருந்த மாணவனை தாக்கி விட்டு பின்பு பொலிசில் கையளித்திருக்கின்றனர். நீர்கொழும்பில் இருந்து பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு கல்வி பயில வந்த மாணவன் சக பயணிகளால் தாக்கப்பட்டார். உயர்கல்வி கற்கும் மாணவர்கள் பல்வேறு தேவைகளுக்காக, வெளியே செல்ல வேண்டிய தேவை உண்டு. தென் இலங்கையில் தமிழ் மாணவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாமல் முடங்கிக் கிடக்கின்றனர். இதனால் பல்வேறு பாதிப்புக்களுக்கு இவர்கள் உள்ளாகின்றனர். உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அதற்குரிய வசதிகளையும் சூழ்நிலையையும் தோற்றுவித்து கொடுக்க வேண்டும். அத்தகையதொரு சூழ்நிலையில் கல்வி பயிலும் மாணவரிடம் இருந்தே சிறந்த பெறுபேற்றை பெறமுடியும். ஆனால் தமிழ் மாணவர்களுக்கு இது முற்றாக மறுக்கப்படுகிறது. மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் தமக்கென சிங்கள கலாச்சார மன்றம் என ஒரு மன்றம் ஆரம்பித்துள்ளனர். இம்மன்றத்தின் மூலமே தமது இனவாத பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு அரசும் மறைமுக ஆதரவுடன் மௌனமாகவும் இருக்கின்றது. யுத்த ஆதரவு, போன்ற சுலோகங்களை முன்வைத்து செயற்படுகின்றன. இன்று புலி சந்தேகம் என்ற போர்வையில் பல்வேறு கொலைகள் இழைக்கப்படுகிறது. ஆனால் இனவாதிகளுக்கு இவற்றில் இருந்து பாதுகாப்பே கொடுக்கப்படுகின்றது.

# சியோல் நகரில் அமெரிக்க இரசாயனக் கழிவுகள்

தென்கொரியாவின் தலைநகரில் உள்ள அமெரிக்க இராணுவத்தளம் ஒன்றில் இருந்தே இந்த கழிவுகள் வெளியேறி உள்ளது.

தென் கொரியாவின் சியோல் நகரில் அமெரிக்காவின் 8வது படைப்பிரிவின் இராணுவத்தளம் ஒன்று உள்ளது. இத்தளத்தில் 37 ஆயிரம் அமெரிக்க இராணுவ வீரர்கள் உள்ளனர். மேற்படி இராணுவத் தளத்தில் இருந்து 20 கொள்கலன்களில் இரசாயனக் கழிவுகள், சியோல் நகரில் ஓடுகின்ற நதியில் ஊற்றப்பட்டுள்ளது. இதனால் சியோலில் பெரும் சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. பாடசாலை மாணவர்கள் பலர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும், அறியமுடிகின்றது.

இச்சம்பவத்தை அமெரிக்க இராணுவத்தினர் முதலில் மறுத்துள்ளனர். மக்களினதும், பொது அமைப்புக்களினதும் விடாப்பிடியான நிர்ப்பந்தங்களால், அமெரிக்க இராணுவத்தினர் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த நாசகார நடவடிக்கைக்கு எதிராக தென்கொரிய மக்கள் மிகப் பரந்த அளவில் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அமெரிக்க இராணுவத்தளம் தென் கொரியாவில் இருந்து எடுக்கப்பட வேண்டும் என்றும், இரசாயனக் கழிவுகள் சம்பந்தமான பொது மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் மக்கள் கோருகின்றனர்.

### ஜப்பானிலும் அமெரிக்க இராணுவத்தினர் வன்முறை

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்பு ஜப்பானில் அமெரிக்கத் தளங்கள் ஏற்படுத்தப்பட்டது. தற்போது ஒக்கினோவா மாநிலத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தை அப்புறப்படுத்துமாறு ஜப்பானிய மக்கள் பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர். குறிப்பிட்ட இராணுவத் தளத்தில் உள்ள இராணுவத்தின் ஜப்பானிய சிறுமி மீது பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதாகத் தெரிய வருகின்றது. ஒக்கினோவா மாநில அரசு ஏற்கனவே தளத்தை அப்புறப்படுத்துமாறு ஜப்பானிய அரசுக்குத் தீர்மானம் அனுப்பியுள்ளது.

இந்தப் பிரச்சினை ஜப்பானிய அமெரிக்க உறவில் பெரும் விரிசலையே உண்டு பண்ணியிருக்கின்றது.

இலங்கையில் கூட புத்தளம் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க செய்தி நிறுவனத்தின் கழிவுகளால் பெரும் பிரச்சினை ஏற்பட்டது. இங்கும் அமெரிக்க நிறுவனத்தினர் தமது இரசாயனக் கழிவுகளை இங்குள்ள பொது மக்கள் வாழும் பகுதியில் புதைத்தனர். இதனால் இந்த நஞ்சின் தாக்கத்தால் பல கால்நடைகள் இறந்தன. முதலில் இரகசியமாக இருந்தது. மக்களும் செய்தி ஊடகங்களும் கொடுத்த தொடர் தாக்குதல்களினால், அமெரிக்க நிறுவனம் தனது பிழையை ஒப்புக் கொண்டதுடன், கழிவுகளும், அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டது.

வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் தாயகத்தை நாசமாக்கும் தீர்வுத் திட்டம்

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன



அதிகாரப் பரவலாக்கல் பற்றிய ந்திரிக்காவின் கருத்துக்கள் 995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ம் திகதி முன்வைக்கப்பட்டது. மிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நடந்து கொள்ளும் முறை பற்றியும், போரை தொடர்வது பற்றியும், பல்வேறு ந்தேகங்கள், ஏற்பட்டிருந்தாலும், கூட, சந்திரிகா முன் வைத்திருந்த ஆவணத்தில் லர் நம்பிக்கை வைத்திருந்தனர். ஏனெனில் இவ்வாவணம் மிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்று, அதனடிப்படையில் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி வகுப்பதாகக் காணப்பட்டது. ஆனால் ந்திரிகா தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடனும், தமிழ் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வது ணில் விக்கிரம சிங்ஹாவுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டதன் மூலம், அவருடைய ஆவணத்தில் இருந்த ல்ல எதிர்பார்ப்புக்கள் காற்றிலே கரைந்தன. இவ் ஆவணத்தில் இருந்த நல்லவை போக எஞ்சியவையே இன்று மேடையேறுகின்றது. அரசியலமைப்பின் 13வது திருத்தம், ற்றும் மாகாண சபை முறை ன்பவை இல்லாமல் செய்தலுடன் எமது எதிர்ப்பையும், மிழ்க் கட்சிகளினதும், முற்போக்கு சக்திகளினதும் திர்ப்பையும் பொருட்படுத்தாமல் மேற்படி ஆவணம் முன் வைக்கப்படுகிறது. உண்மையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் செய்ய வேண்டுமாயின், அரசியலமைப்பு சபையைக் கூட்டி, அதிகாரப் பரவலாக்கலுடனான ஜனநாயக அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதை தவிர்த்து விட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டு இனவெறிக் குழுக்களுக்கு விட்டுக் கொடுக்கும் போக்கிலேயே செயற்பட்டுள்ளார்.

வெற்றுப் பேச்சுக்களுடனும், கொடிய யுத்த நடவடிக்கைகளுடனும், கடந்த 5 ஆண்டுகள் வீணடிக்கப்பட்டுள்ளன. தற்போது தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையும், தனித்துவத்தையும் பாதிக்கும் ஒரு நகல் யாப்பை தற்போது சந்திரிகா முன்வைத்திருக்கிறார். தமிழ் மக்களையும், முற்போக்கு சக்திகளையும் ஏமாற்றிவிட்டு, நாடே இரத்த வெள்ளத்தில் தத்தளிக்கும் போது சந்திரிகாவும், ரணிலும் இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசுகின்றார்கள்.

சந்திரிகாவின் சிங்கள இராணுவமும், பிரபாகரனின் தமிழ் இராணுவமும், செயற்பட்டுக் கொண்டு இரட்டை ஆட்சி நடக்கும் இவ்வேளையில், இச் சரியான கேள்வியை இங்கு முன்வைப்பது பொருத்தமானதாகும். இந்த இரண்டு இராணுவத்தில் ஏதாவது ஒரு இராணுவத்தைத் திருப்பி அழைக்காமல், இடைக்கால நிர்வாகம் எவ்வாறு சாத்தியப்படும்? அவ்வாறு இல்லாது போனால், இந்த இரண்டு இராணுவங்களுக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதா? இக் கேள்விகளுக்கு இதுவரை விடையில்லை. எனவே இடைக்கால நிர்வாகம் ஆரம்பிக்கப்படப் போவதும் இல்லை.

உயர்குடி புத்திசாலியான ரணில் தனது சதியை மிக நுட்பமாகவே தீட்டியுள்ளார். மறைமுகமாகவேனும் 13வது திருத்தத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும், தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தை ரத்துச் செய்வதே இவரது தேவையாகும். வெறும் பூச்சுக்களால் மறைத்து இவரது மாமன் பிஸ்மார்க்கால் வழங்கப்பட்ட சீர்திருத்தங்களை எதிர்ப்பதே ரணிலின் இலட்சியமாகும். எனவே புதிய யாப்பு என்ற பெயரில், எதுவும் இல்லாத யாப்பை வழங்குவதே இவர்களின் நோக்கமாகும். புதிய அரசியலமைப்பின் விசேடம் என்ன என்றால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் யாவும் பிரதமருக்குச் செல்வதே ஆகும்.

இந்நகல் யாப்பு சிங்கள இன வெறியர்களின் விருப்புக்கு மாறானது என்று கூறி ஆர்ப்பாட்டங்களை "சிங்கள உறுமய" என்ற கொடூரமானவர்களினால் மட்டுமே நடத்த முடியும். உலக வங்கியின் பொருளாதாரக் கொள்கையினால் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப்பட்டுள்ள சிங்கள மக்களை மையமாக வைத்தே எதிர்வரும் தேர்தலுக்கு அவர்களை அணிவகுப்பதே இதன் நோக்மாகும்.

மக்கள் விடுதலை முன்னணியினர் சந்திரிகா, ரணில் கூட்டில் உள்ள எதிர்ப்புரட்சித் தன்மையை அம்பலப்படுத்துவதை தவிர்த்து விட்டு புதிய அரசியலமைப்பில் தேசிய ரீதியில் வழங்கப்பட்டுள்ள அதிகார பரவலாக்கலையே எதிர்க்கின்றனர். எப்படிக் கூறினாலும் தமிழ் மக்களின் தேசிய தனித்துவம் இவ் அரசியலமைப்பில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த நாட்டில் மூன்று தேசிய இனங்களை ஏற்றுக் கொள்ளும் மக்கள் விடுதலை முன்னணி சிங்கள உறுமையா பக்கம் சேர்ந்து அதிகாரப் பரவலாக்கலை எதிர்ப்பதே புதிரான புதிராக இருக்கிறது.

இன்று இவ்வரசியல் அமைப்பில் தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தையும் அதன் அடிப்படையில். அதிகார பரவலாக்கலைச் செய்ய காத்திரமான போராட்டங்களை நடத்துவதே இடதுசாரிகளின் கடமையாகும். இத்துடன் எதேச்சதிகார நிறைவேற்றதிகாரத்தை நீக்க வேண்டும் என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த யுத்த முயற்சிக்கு மனித வளத்தையும், நிதி உதவியையும் செய்ய வேண்டாம் என மக்களுக்கு வலியுறுத்த வேண்டும். மனசாட்சிக்கு ஏற்ப எதிர்ப்பவர் என்ற அடிப்படையில் படையில் இருந்து நீங்குபவர்களையும் ஆதரிக்க வேண்டும். பொருளாதாரக் காரணங்களால் மக்கள் கிளர்ந்தெளத் தொடங்கி உள்ளனர். இவர்களின் போராட்டங்களுடன் தமிழ் மக்களின் போராட்டத்தை இணைத்து போராட வேண்டும்.

# கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் போராட்டம்

கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் தமக்கு வேலை வாய்ப்பு வழங்கக் கோரி போர்க்கொடி எடுத்துள்ளனர். கடந்த ஒருவாரகாலமாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மட்டக்களப்பு கரின் காந்தி சிலை முன்பாக டத்திவிட்டு, அரசுக்கு 3 வார கால அவகாசம் கொடுத்துள்ளனர். தமது கோரிக்கையை மூன்று வார காலத்தினுள் அரசு நிறைவேற்றாது போனால், திருகோணமலையில் வடக்கு, கிழக்கு மாகாண சபை முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தப் போவதாக அறிவித்துள்ளனர். தமது யர்கல்வியை மிகப் பெரிய திர்பார்ப்புடன் தொடங்கிய ப்பட்டதாரிகள், மிக நீண்ட ட்களாக வேலையற்று இருப்பதால் விரக்தியின் ல்லைக்கே சென்றுள்ளனர். வடக்கு, கிழக்கு பொருளாதாரத் தடைகளாலும், யுத்த அச்ச உணர்வினாலும், இப்பட்டதாரிகள் பல்வேறு வழிகளில் தாக்கங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பிட்ட துறையைத் தவிர்ந்த ஏனையவற்றின் மூலம் வாழ முடியாத நிலையை எமது கல்விக் கொள்கை எமக்கு வழங்கியுள்ளது. இதனால் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுவோர் சமூகம் கௌரவம் என்று எதிர்பார்க்கின்ற தொழிலைத் தவிர வேறு தொழிலை செய்ய முடியாதவராய், உள்ளனர். இதனால் தமக்கு அந்தத் தொழில் எதிர்பார்ப்பில் இருக்கும் துர்ப்பாக்கிய நிலையில் வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். சாதாரண சூழ்நிலை இருந்தால் கூட இப்பட்டதாரிகள் வாழ்வில் வேறு மாற்றங்களுக்கு வழிவகைகளைத் தேடிக் கொள்ளலாம். யுத்த சூழலால், வடக்கு, கிழக்கு கருகிப் போய் கிடக்கிறது. இத்தகையதொரு சூழ்நிலையில் தமது இளமையைத் தியாகம் செய்து பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் வாழும் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறி ஆகி உள்ளது. இவர்கள் அணியில் சேருவதற்கு மேலும் நூற்றுக் கணக்கானவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளி வருகின்றனர். மிகவும் விரக்தி அடைந்த நிலையில் இருக்கும் இப்பட்டதாரிகள் அவர்களின் நிலைமையை மாற்றுவதற்கு உடனடி மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அத்தகைய நிலையில் இலங்கை அரசு இல்லை. கல்வித்திட்டமும், இதே நிலையை தோற்றுவிப்பதிலேயே கருத்தாக இருக்கிறது. தமிழ் மக்களின் விடுதலை கிடைக்காவிடின் இந்தப் பாரிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்குமா என்பதில் ஐயம் தான் தோன்றுகிறது.

இதேவேளை தென் இலங்கையில் இலங்கை அரசு பட்டதாரிகளுக்கு பால் வார்க்கின்றது என்று நாம் எண்ணமுடியாது. தென் இலங்கைப் பட்டதாரிகள் காலத்துக்கு காலம் இலங்கை அரசுக்குக் கொடுத்த அழுத்தங்களை யாவரும் அறிவர். 1971ம் ஆண்டு கிளர்ச்சியே இதற்கு முக்கிய சான்றாக கொள்ளப்படுகின்றது. இராணுவத்தில் இருப்பவர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் வழங்கத் தயாராக இருக்கும் இலங்கை அரசு இந்த நாட்டில் உள்ள பட்டதாரிகளுக்கு எதுவும் செய்வதற்குத் தயாராக இல்லை.

இப்பட்டதாரிகள் போராட்டம் இன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளில் மிக முக்கிய போராட்டமாக மாற வேண்டும். போராட்டத்தின் மூலமே பட்டதாரிகள் தமது இலக்கை அடைய முடியும். இதற்காக தமது போராட்டத்தை திடசங்கற்பத்துடன் பட்டதாரிகள் நடத்த வேண்டும். இவர்களின் போராட்டத்துக்குத் தமிழ் மக்களின் சகல பிரிவினரும் ஆதரவு வழங்க வேண்டும்.

## மின்சாரசபை ஊழியரின் போராட்டம்

14000 மின்சாரசபை ஊழியர்கள் கடந்த 25ம் 26ம் 28ம் தேதிகளில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கொழும்பு தலைமையகத்தின் முன்பாக 1500 க்கும் அதிகமான ஊழியர்கள் மறியல் போராட்டத்தில் பங்கு கொண்டனர். மூன்று வருடங்களுக்கு ஒருமுறை செய்யப்படும் சம்பள மீளாய்வு இம்முறை செய்யப்படாததாலேயே இவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஜனவரி 19ம் தேதியில் இருந்து யூலை 19ம் தேதிவரை 8 கடிதங்கள் நிர்வாகத்திற்கு அனுப்பியும் பதில் கிடைக்காததாலேயே, தொழிலாளர் மறியல் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதே வேளை புகையிரத பகுதியில் 10,000 தொழிலாளர்கள் 27ம் தேதியில் இருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிய வருகிறது. 25 தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய தொழிற்சங்க ஒன்றியம் யூலை 28 தேசிய சம்பள எதிர்ப்பு நாளைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

யுத்தத்திற்கு அதிகளவு பணத்தை இலங்கை அரசு விரயம் செய்வதால், தொழிலாளர்களின் விடயங்களில் அரசு அசிரத்தையாக இருந்து வருகிறது. இதனால் தொழிலாளர் மத்தியில் அரசுக்குக் கடும் எதிர்ப்பு கிளம்பி வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# சீதனப் பிரச்சினையும் ஆணாதிக்கக் கருத்துக்களும்

## யாழ்ப்பாண சமூகப் பின்னணியில் சில குறிப்புகள்

**செ. சக்திதரன்**



*(தமிழ் சமூகத்தில் அதிகமாக யாழ்ப்பாணத் தமிழரிடத்தில் திருமண வயதிலுள்ள இளம் கன்னியரை நேரடியாகப் பாதிக்கின்ற ஒரு பிரச்சினையாகப் பலராலும் அறியப்பட்டுள்ள சீதனப் பிரச்சினை பற்றி இலக்கிய முயற்சிகள் ஊடாகவும், வேறும் பல வழிகளிலும் கருத்துக்கள் பல வெளியிடப்பட்டுள்ள போதிலும் அவை உணர்ச்சி பூர்வ வெளிப்பாட்டைச் செய்த அளவிற்கு உண்மை நிலையினை வெளிக்கொணரவில்லை என்றே கூறலாம்).* "சீதனக் கொடுமையை நீக்குவோம்" - "ஆண் வர்க்கமே அறிந்து கொள்" போன்ற கோஷங்கள் எதுவும் சமூக வாழ்க்கையோடு கலந்து விட்ட சீதனப் பிரச்சினையின் எந்தவித தாக்கத்தினையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. மேலும் இப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணிகளை விளங்கிக் கொள்ளாமல் இதனைத் தீர்த்துக் கொள்ள முயல்வது சாத்தியமற்ற ஒரு முயற்சியாகவே பெருமளவில் அமைகின்றது.

சமூக வாழ்வில் சொத்துடமை ஏற்பட்ட போதே அதற்கான பரிமாற்றமும் ஏனைய வழிகளைப் போலவே திருமண உறவினர்களினூடாகவும் வளர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆண்களே திருமணத்தின் போதும் சார்பாகச் சில சொத்துக்களை சீதனமாகக் கொண்டு சென்றனர் என வேத இலக்கியங்கள் ஆதாரங் கூறுகின்றன. சில மேற்காசிய நாடுகளில் இத்தகைய தன்மை இன்னும் காணப்படுகின்றது. மன்னவர்களும் செல்வந்தர்களும் தமது தகுதிகளை வெளிப்படுத்துவதற்கு சீதன வழக்கத்தினை சில காலகட்டங்களில் பயன்படுத்திக் கொண்டனர். மிக இள வயதில் திருமண வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்ட அக்காலத்தவர்களுக்கு இவ்வாறான பொருள் வழங்கல் என்பது ஓரளவில் தேவையானதாகவும் அமைந்திருந்தது எனலாம். இத்தேவை இப்போதுங் கூட இல்லாமல் போய் விடவில்லையாயினும் சாதாரண பொருளாதார சக்திகளின் பயன்பாட்டுடன் இணைந்த சீதனப் பேரம் பேசலாம் அத்தகைய வசதியற்றோர் அமையச் செலவினை நாடும் போது பிரதியீடு இல்லாத வெற்று நிலைமையை எதிர் கொள்வதுமே மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட அசௌகரியமாக - சமூகக் குறைபாடாக வெளிப்படுகின்றது.

சமூகமாக மனிதன் வாழத் தலைப்பட்டதுடன் சொத்துடமையும், அதனுடன் இணைந்த பொருளாதாரக் காரணிகளும் அவனது வாழ்வில் முக்கியத்துவம் பெறத் தொடங்க, சீதனம் என்ற கொடுக்கலும் பெறுகையும் சேர்ந்து கொள்ளத் தொடங்கின. சீதன வழக்கத்தின் தொடக்கம் அதன் வரலாற்றுத் தொடர்ச்சி போன்ற விடயங்களை இக்கட்டுரை குறிப்பிளவிலாவது விளக்கப்போவதில்லை. மாறாக சமகால அனுபவத்துடன் இப்பிரச்சினையின் தன்மையினையும் அதற்கும் பின்னிலையிலுமுள்ள காரணிகளையும் நோக்குவதுடன் ஆணாதிக்கத்துடன் இதனைத் தொடர்புபடுத்துவது சம்பந்தமான பொருத்தப்பாட்டினையும், சுருக்கமாக அணுகுவதே இங்கு தரப்படும் குறிப்புக்களின் நோக்கமாகும்.

இலங்கையைப் பொறுத்து பிரதான இனச் சமூகங்களான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோரிடத்து சீதன வழக்கம் என்பது சிறிதளவிலாவது இருந்தே வருகிறது. அதேவேளை யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்தின் தன்மை அல்லது தனித்துவம் மக்களின் மனோபாவம் சார்ந்த விடயங்கள் போன்ற பல காரணிகள் அங்கு சீதனம் என்பதனைத் தவிர்க்க முடியாத ஒரு தேவையாக சமூக வாழ்வில் நிலைநிறுத்தியுள்ளன. சிங்கள-முஸ்லிம் சமூகத்தவர்களிடத்தில் பெண் பக்கத்திலிருந்து குறித்த தொகை பணம் ஏனைய சொத்துக்கள் என்பன வழங்கப்படும் வழக்கமுள்ள அதேவேளை காதல் திருமணங்கள் (சீதனம் பெற்றுக் கொள்ளாத) சீதனக் கொடுக்கல் வாங்களற்ற பேச்சுத் திருமணங்கள் என்பன நடைபெறாமலுமில்லை. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் இத்தகைய திருமணங்கள் அவர்களிடமிருந்து சமூக அந்தஸ்த்தினைப் பெறுவதில் எத்தகைய பிரச்சினைகளையும் எதிர்நோக்குவதில்லை என்பதே. ஆனால் யாழ்ப்பாண சமூக அமைப்பில் சீதனமற்ற திருமணம் ஒன்றைச் செய்து கொள்ளுவதற்கு பொருளாதாரப் பக்கத்தில் மாத்திரமின்றி ஏனைய சமூகக் காரணிகள் பக்கத்திலும் ஒருவர் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும் அல்லது சீதன வழக்கத்தோடு கூடிய திருமணமுறை ஒன்றை நோக்கி இயல்பாகவே அவர் பெற்ற தயார்படுத்தலிலிருந்து விடுபட்டுக் கொள்ள வேண்டும்.

அடிப்படையிலேயே சமூக அந்தஸ்து என்பதுடன் பின்னிப் பிணைந்த யாழ்ப்பாண சமூக அமைப்பு சீதனக் கொடுக்கல் வாங்கல் என்பதனையும் ஒரு சமூக அந்தஸ்த்தாகவே நீண்டகாலமாகக் கருதி வந்துள்ளது. சீதனம் வாங்காத திருமணங்கள் அல்லது அதிற் சம்பந்தப்பட்ட ஆணோ அன்றி பெண்ணோ கூட ஒரு தரக் குறைவான நிலையிலேயே பேசப்பட்டனர்.

"சீதனமும் வேண்டாம் பாதனமும் வேண்டாம் சிங்கார நாச்சியாரே நீர் வந்தாலே - போதும்" என்பது ஓர் இழிவுச் சிறப்பாகவே பயன்படுத்தப்படுகின்றமை இங்கு நோக்கற்பாலது. சீதனம் பெற்றுக் கொள்ளுவதன் மூலம் ஓர் ஆண் தனது பெறுமதியை அளவிட்டுக் கொள்ளுவதும் அவ்வாறு அவர் பெறத்தவறுமிடத்து அவரது குறைபாடுகள் சந்தேகத்துடன் மற்றோரால் ஆராயப்படுவதும் சமூக வாழ்வின் சாதாரண விடயங்களாகவே விளங்குகின்றன. பெண் கூட தனது பெற்றோரால் அல்லது சகோதரர்களால் தன் சார்பில் வழங்கப்பட்ட சீதன அளவைக் கொண்டு தனது பிறந்த வீட்டின் பெறுமதியினைப் பறைசாற்றுவதும் திருமண வாழ்வில் அதன் மூலமாக ஒரு விசேட தகுதியினைத் தான் பெற்றுக் கொண்டதாக நம்புவதும் சமூக ஒழுங்கமைப்பின் வழிவந்த பழக்கங்களேயன்றி வேறெதுவுமில்லை.

உண்மையில் சீதனப் பிரச்சினைக்கான காரணங்களைத் தேடுமிடத்து அதனை ஒரு பொதுப்பிரச்சினையாக நோக்கும் போது தான் யாழ்ப்பாண சமூகவாழ்வின் அடித்தளத்திலேயே அது அமைந்திருப்பதனை அறிந்து கொள்ள முடியும். சமூக மட்டத்திலான ஒரு மாற்றமின்றி இதனை முற்றாக நீக்குவது மிகவும் கடினமானதொன்றே. துரதிஷ்டவசமாக பின்வந்த சில மாற்றங்கள் சீதனப் பிரச்சினையை நீக்கும் தன்மை கொண்டவையாக இல்லாமல் சீதன பெறுமதியினை உயர்த்தும் பண்புடையவையாகவே அமைந்து விட்டன. யாழ்ப்பாண சமுதாயம் மரபார்ந்த கட்டுக் கோப்புக்குட்பட்டது. அண்மைய போராட்டங்கள் இதிற் தளர்வுகளை ஏற்படுத்தினாலும் அது முற்றாகச் சிதறி விடவில்லை. மாறாக ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்களும், சீதன வழக்கத்தினைத் தள்ளி வைக்கத் தயாராக இல்லை என்பதனையும் கவனிக்க வேண்டும். யாழ்ப்பாண தமிழ்ச் சமூகத்தில், திருமண வயதிலுள்ள ஆண்-பெண் வீதாச்சாரம் 1:20 (1 ஆண் 20 பெண்) என்பதனையும் தாண்டிச் செல்லும் இன்றைய நிலை, தமது சமூக இறுக்கங்களுக்கு அப்பால் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள தயாராக இல்லாத இவர்களது பண்பு தொடரும் வரை மாற்றமடையக் கூடியதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவேயுள்ளது எனலாம். போராட்டத்தின் மூலமான உயிரிழப்புக்களும், பிற நாடுகளை நோக்கிய இடம்பெயர்வுகளும் விகிதாசார இடைவெளியை அதிகரிக்கவே செய்கின்றன. இந்நிலையில் மணமகன் தேவை என்பது அதிக கேள்விக்குட்பட்ட ஒரு விடயமாகியுள்ளது. மானிட உணர்வுகள், மனிதத்துவம் என்பவற்றையெல்லாம் புறந்தள்ளி அதிகரிக்க முடியாத நிரம்பல் - மிகைக் கேள்வி நிலையில் சந்தையில் ஏற்படும் விலை உயர்ச்சி நிலைக்கு அப்படியே மனிதர்களும் திருமண விடயத்தில் உட்படுவது விசித்திரமானது மட்டுமன்றி விசமமானதுங் கூட. இன்னும் 1970களின் பிற்பகுதியிலிருந்து ஆரம்பத்தில் வேலைவாய்ப்புத் தேடியும் பெருந்தொகையாக இடம் பெயர்ந்த தமிழ் இளைஞர்-யுவதிகள் என்போரின் உழைப்பின் வழி உள்நாட்டிற்கு வரத் தொடங்கிய அந்நிய பொருளாதார வரவு நாணயமாற்று வீதத்தில் அதிகரித்த தொகையாக உள்நாட்டு நாணயத்தில் கிடைக்கத்தொடங்கிய போது சீதனத் தொகையின் அளவும் இருந்ததிலிருந்து ஏறக்குறைய பத்து மடங்குகளாக அதிகரித்துக் கொண்டது. வெளிநாட்டு வருமானத்தினைக் கொண்டிராத குடும்பங்கள் சீதனச் சந்தையில் கொள்வனவுச் சக்தி அற்றவர்களாகவே ஆகிக் கொள்கின்றார்கள். இத்தகைய ஒரு நிலைமையில் தான் சீதனக் கொடுமையின் பாதிப்புக்களைச் சொல்ல முற்பட்ட பல சீர்திருத்தவாதிகளும், பெண்ணிலைவாதிகளும், இலக்கிய கர்த்தாக்களும் பெருமளவில் இது ஆணாதிக்க அம்சம் என வரையறுத்துக் கொண்டு அத்தகைய ஒரு இலக்கை நோக்கி தமது சரமாரியான தாக்குதலைத் தொடுத்து திருப்தி காண முயன்றனர். ஆனால் உண்மையில் ஆண்-பெண் என்ற பாலினப் பாகுபாட்டிற்கும் அப்பால், சமூக மட்டத்திலான ஒரு பிரச்சினையாக இது இருப்பதென்பதுடன் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் இது விடயத்தில் பாதிப்புக்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகிறார்கள் என்பதும் மறுக்க முடியாத ஒரு விடயமாகும். பெண் பிள்ளைகளுக்கான சீதன தேடலில் தந்தையரொருவர் வாழ்நாளின் பெரும்பகுதியை தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பால் அர்ப்பணிப்பதும் பெண் சகோதரிகளோடு பிறந்த ஆண்கள் பலர் சகோதரிகளின் சீதனத்திற்காக தயங்காமல் தமது வாழ்வின் விருப்புக்களைத் தியாகித்துக் கொள்வதும் நடைமுறையில் சாதாரண விடயங்களாக உள்ளன. மறுவகையில் இத்தகைய ஒரு நிலையை தந்தையோ சகோதரனோ ஏற்காது தமது சொந்த விருப்பு - வெறுப்புகளுக்கு முதன்மையளிப்பின் அவர்களைச் சமுதாயத்தில் கடமை தவறிய கணவான்களாக மதிப்பிடும் பண்பும் இன்னமும் மறையவில்லை.

இன்று ஐரோப்பிய நாடுகளுக்கும் மேற்காசிய நாடுகளுக்கும் சென்றுள்ள இளைஞர்களிற் பலர் தமக்காகவன்றி தமது சகோதரிகளின் தேவைக்காகவே சென்றிருக்கிறார்கள் என்பதும் வெளிப்படையான உண்மை. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், அதற்கு வெளியேயும் வாழுகின்ற தமிழ் இளைஞர்கள் பலரும் இத்தகைய ஒரு நிலையிலிருந்து விடுபட்டவர்கள் எனக் கூறுவதற்கில்லை. இதுவே இருமனங்களின் சங்கமத்தில் வரும் திருமணங்கள் பல, பணப்பெறுமதியில் சந்தைச் சக்திகளின் சங்கமத்திற் சந்திப்பதற்கு காரணமாயிற்று. உழைத்தவற்றையெல்லாம் சகோதரிகளின் வாழ்வுக்காக செலவு செய்த சிலர் தமது வாழ்வை இழந்து போன சம்பவங்களும் இல்லாமலில்லை இவர்களைப் பார்த்து என்ன "ஆதிக்கம்" சொல்லுவது என்பது பற்றி இலக்கியவாதிகள் கூட இன்னமும் கண்டு பிடிக்கவில்லை.

நடுநிலையுடன் அறிவியல் பூர்வமாக சிந்திப்பின், சீதனப் பிரச்சினைக்கும்,

தொடர்ச்சி ...... 1

படிப்பகம்

www.padippakam.com



# சிங்கள பௌத்த தலைவர்களின் துரோகங்கள்



பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டமைக்கு ஜே. ஆரின் பாத யாத்திரை, பௌத்த பிக்குகளின் அச்சுறுத்தல் போன்ற பல்வேறு காரணிகள் முன் வைக்கப்படுகின்றன. இதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தது என்றும், மறுபக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தான் அதற்கு குந்தகமாக இருந்தது என்றும் ஒரு படத்தைத் தமிழ் மக்கள் முன்னே அந்த நாள் தொடக்கம் இன்று வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காட்டி வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியோ தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாங்கள் தான், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எல்லா வித ஒத்துழைப்பையும் அரசுக்கு நல்குவோம் என அடித்துக் கூறிக் கொள்கிறது.

உண்மை என்னவெனில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இவ்விரு பேரினவாதக் கட்சிகளுக்கும் ஒருபோதும் விருப்பம் இருக்கவில்லை. அங்ஙனம் விருப்பம் இருந்திருக்குமேயானால், தமிழ் மக்களின் பிரச்சினை இவ்வளவு தூரம் பூதாகரமாக மாறியிருக்காது. 24 மணித்தியாலத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்துவேன் என்று கூறிப் பதவிக்கு வந்த பண்டாரநாயக்கா தமிழ் மக்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பார். இலங்கைப் பொருளாதாரம் சரிந்திருந்த நேரத்தில், தென் இலங்கை மக்கள் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பில் துவண்ட நேரத்தில், அதை இனவாதமாக்கி பதவிக்கு வந்தவர் பண்டாரநாயக்கா. முதன் முதலாக இந்த நாட்டில் இரத்த ஆறை ஓடச் செய்த ஒரு தலைவரிடம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு இருந்தது என்பதை நம்புவது மடத்தனமாகும். எனவே பண்டா-செல்வா ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க பண்டாரநாயக்கா முயன்றார் என்பது வெறும் மாயையாகும்.

இதே போன்றே ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் கொண்டுள்ளது என்பது, ஒரு மனப்பிரமையாகும். 1987ல் ஐக்கிய தேசியக் கட்சியால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு என்ன நடந்தது. ஜே. ஆர் இந்தியாவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் போது பிரேமதாசா உட்பட மூத்த அமைச்சர்கள் அன்றைய ஒப்பந்தத்தைப் பகிஷ்கரித்து இருந்தனர். ஆனால் மீண்டும் இதே அமைச்சர்கள் ஜே. ஆரின் மந்திரி சபையில் கைகோர்த்து சேவை செய்தனர். ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களையும் உலகத்தையும் ஏமாற்ற அதன் தலைவர்களுக்கு பல முகங்களைக் கொடுத்திருந்தது. அந்த முகங்களுக்குரிய பணிகளை அவர்கள் செவ்வனே செய்தார்கள்.

இன்று இவ்விரு பேரினவாத கட்சிகளும், தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைக்க முயற்சிக்கின்றன. சந்திகா அரசினால் முன் வைக்கப்பட்ட தீர்வுப் பொதியில் ஒன்றுமே இல்லை என தமிழ் சமூகம் நிராகரித்திருக்கிறது. ஆனால் இத்தீர்வுப் பொதி மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுள்ளோம் என திருப்தி தெரிவித்திருக்கின்றன. பொதுஜன முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும். தமிழ் மக்களின் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மூன்று பிரதான விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. 1. காணி, 2. வடக்கு, கிழக்கு இணைப்பு 3. அரசின் தன்மை

தற்போது பேசப்படுகின்ற தீர்வில் இன்று மூன்றுக்குமே இடம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இவை மூன்றையும் இல்லாமல் செய்வதில் பொதுஜன முன்னணியை விட ஐக்கிய தேசியக் கட்சியே அதிக முன்னணியில் இருந்துள்ளது.



சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லப்படுகின்ற இந்த 52 ஆண்டு காலப் பகுதியில் இரண்டு கட்சிகளுமே தமிழ் மக்களை ஏமாற்றியே வந்துள்ளன. அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிரான பெருந்துரோகங்களையும் இழைத்துள்ளனர்.

முதலில் 10 லட்சம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தது, ஐக்கிய தேசியக் கட்சி, அதனைத் தொடர்ந்து பல்வேறு குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்தி தமிழ் மக்களை அவர்களது சொந்த மண்ணிலேயே சிறுபான்மையினராக்கும் முயற்சியிலும் இருந்தது. இதே போலவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் 1956ல் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன் பின் 1972 குடியரசு யாப்பு அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. உயர் கல்வியில் தரப்படுத்தலை அறிமுகப்படுத்தியது போன்ற பல்வேறு துரோகங்கள் இவ்விரு கட்சிகளாலும் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவையாகும்.

கடந்த 52 ஆண்டு காலமாக ஆட்சிப் பரப்பில் இருந்து வருகின்ற இவ்விரு பேரினவாத கட்சிகளின் தலைவர்கள் உதட்டளவில் கூட சிங்கள



மொழியுடன் தொடர்பு இல்லாதவர்களே. இவர்களின் பெயர்களில் ஒட்டியிருக்கின்ற ஆங்கில கனவான்களின் பெயர்களில் இருந்தும் இவர்களின் வர்க்க தன்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம். இந்த மேற்கத்திய நாகரீகத்தில் பின்னி பிணைக்கப்பட்ட இத்தலைவர்களின், பிள்ளைகள் உறவினர்கள், அனைவரும், அந்த பாணியை பின்பற்றுபவர்களே. பௌத்த மதத்தையும், சிங்கள மொழியை தமது அரசியல் சுகவாழ்வுக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

தென் இலங்கையில் வாழுகின்ற சாதாரண பொதுமக்கள் தமிழ் மக்களுடன் சமாதானமாகவே வாழ விரும்புகின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அதிக விருப்பம் உடையவர்களாகவும் உள்ளனர். இதற்கு உதாரணமாக கடந்த 52 வருட காலப் பகுதியில் சிங்கள மக்கள் பச்சை இனவாதத்தைக் கக்கிய எத்தகைய இனவாத அமைப்பின் பிரதிநிதிகளையும் ஆதரிக்கவில்லை. தென் இலங்கையில் இயங்குகின்ற காணாமல் போன படைவீரர்களின் அமைப்பு தெரிவிக்கும் கருத்துக்களில் இருந்து சாதாரண சிங்கள மக்களின் உணர்வலைகளை புரிந்து கொள்ளலாம்.

தமிழ் மக்கள் தமது உரிமைக்காக ஆரம்பத்தில் அகிம்சை ரீதியாக போராடினார்கள். பின்பு



ஆயுதம் ஏந்தி போராடினார்கள், போராடிக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சிங்கள பேரினவாத தலைமைகள் இதய சுத்தியுடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பவில்லை. பேச்சு வார்த்தைகள் என்ற போர்வையில் தமிழ் மக்களை ஏமாற்றுவது, காலத்தை இழுத்தடிப்பது, தேர்தல் நன்மைகளுக்காக வாக்குறுதி வழங்குவது, பின்பு, அதை நிறைவேற்றாது விடுவது, கடும் அடக்கு முறைகளைப் பிரயோகிப்பது போன்ற பல்வேறு கொடுமைகளை இழைத்து வருகிறது.

ஆரம்பத்தில், இருந்தே தமிழ் தேசிய இன உணர்வை அடியோடு அழிக்கவே சிங்கள பௌத்த பேரினவாதம். குறியாக இருந்தது. ஆனையிறவுத் தளம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் வீழ்த்தப்பட்ட பின்பு, தமக்கிடையே இருந்த முரண்பாடுகளையெல்லாம் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு தமிழ் தேசிய இன உணர்வை ஒழித்துக் கட்டுவதில் மும்முரமாக செயற்படுகின்றன.

தென் இலங்கைப் பேரினவாதக் கட்சிகளில், பேரினவாதத்தை ஐக்கியப்படுத்துவதில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட ஐக்கிய தேசியக் கட்சியே முன்னணியில் நிற்கிறது. அதேபோல் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகின்ற தீர்வைப் பலவீனப்படுத்துவதிலும் ஐக்கிய தேசியக் கட்சியே முன்னணியில் நிற்கிறது.

சிங்கள உரிமை கட்சியின் தலைவர், திலக் கருணாரத்தினா ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராவார். இவரே இன்று சிங்கள இனவாத சக்திகளின் தலைவராக இருக்கின்றார். இதில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியில் என்னென்ன முகங்கள் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஆனையிறவு தள வீழ்ச்சியின் பின்பு கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து நவீனரக ஆயுதங்கள், விமானங்கள், கடற்படை கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

படையில் இருந்து தப்பி ஓடிய படை வீரர்களைத் துரத்தி பிடித்து போர் முனைக்கு அனுப்புவதில் அரசு கவனமாக இருந்து வருகிறது. ஒரு பக்கத்தில் அரசியல் தீர்வின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண போகின்றேன், என உள்நாட்டு மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றிக் கொண்டு மறுபுறத்தில் நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்து தமிழ் மக்களை கொல்கின்றது இன்றைய அரசு.

உண்மையில் இந்த நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமெனில், யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கில் நிலை கொண்டுள்ள படையினர் வாபஸ் பெற வேண்டும். இயல்பு நிலை வடக்கு, கிழக்கில் தோற்றுவிக்கப்பட வேண்டும். இதைச் செய்யக்கூடிய நிலையில்



பொதுஜன ஐக்கிய முன்னணி இல்லை. அதை செய்யும்படி வலியுறுத்தும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும் இல்லை.

இத்தகைய இனவாத அரசியல் நிலை இல்லாது போனால் ஆட்சிப்பரப்பில் தம்மால் நிலைக்க முடியாது என்பது இன்று ஆட்சியில் உள்ளவர்களுக்கும் எதிர்க்கட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நன்கு தெரியும்.



"வெண்ணை திரண்டு வரும் வேளையில் பானையை உடைப்பது போல் இவ்விரு கட்சிகளும் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சந்தர்ப்பங்களில் கூட பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவார்கள். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மேற்படி கட்சிகளை நம்புவது பயித்தியக்காரத்தனமாகும்.

(பகலோன்)

படிப்பகம்

www.padippakam.com



# பிலிப்பைன்ஸ் அரசின் மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பிற்கு எதிரான யுத்தம் வெற்றி பெறுமா?



* மின்டானோ தீவில் வறுமையை ஒழிக்க பிலிப்பைன்ஸ் அரசிடம் திட்டம் உண்டா?
* பணய நாடகத்தை பிலிப்பைன்ஸ் அரசு செய்ததா?
* கத்தோலிக்க மக்களுக்கு ஆயுதங்களை வழங்குவது பிரச்சினைக்குப் பரிகாரம் காணுமா?
* பிலிப்பைன்ஸ் புரட்சிகர தொழிலாளர் கட்சியின் அறைகூவலை உலகம் செவிமடுக்குமா?

மிக நீண்ட நாட்களாக பிலிப்பைன்ஸ் அரசுக்குச் சவாலாக விளங்கும் மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பிற்கு எதிராக பிலிப்பைன்ஸ் அரசு போரைப் பிரகடனப்படுத்தியுள்ளது. பிலிப்பைன்ஸ்ஸின் தெற்குப்புற தீவான மின்டோனா தீவிலேயே யுத்தம் வெடித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 30ம் திகதி மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பினர், பிலிப்பைன்ஸ் அரசுடனான பேச்சுவார்த்தையைக் காலவரையறையின்றி ஒருதலைப் பட்சமாக ஒத்தி வைத்ததன் பின்பே போர் தீவிரம் பெற்றுள்ளது. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஜோசெப் எஸ்ராடா அமெரிக்க உதவியுடன் இஸ்லாமிய விடுதலை அமைப்பை நிர்மூலம் ஆக்கவே முயல்கின்றார்.

பிலிப்பைன்ஸ் இராணுவம் முதலில் மின்டானோ தீவில் உள்ள மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பின், பிரதான முகாமான அபூபக்கர் முகாமைத் தாக்கியுள்ளது. இதனால் கடும் சினங் கொண்ட இஸ்லாமிய விடுதலை அமைப்பினர், பிலிப்பைன்ஸ் இராணுவத்திற்கெதிராக, மின்டானோ தீவில் மாத்திரம் அல்ல அதற்கு வெளியேயும் தாக்குதல்களை நடத்தப் போவதாக சூழ் உரைத்துள்ளனர். நடைபெறும் யுத்தத்தினால் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஜோசெப் எஸ்ராடாவுக்கு பெரும் மகிழ்வைத் தரக்கூடிய நிகழ்வுகள் நடைபெறப் போவதில்லை. இந்த யுத்தத்தினால் பிலிப்பைன்ஸ் இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளில் குழப்பங்களே ஏற்படும்.

மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பினர், தமது தாய் முகாம் பிலிப்பைன்ஸ் இராணுவத்தால் தாக்கப்பட்டதற்காக, பிலிப்பைன்ஸில் பல்வேறு நகரங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர். சாம்பன்கா என்ற பிராந்தியத்தில் உள்ள இரண்டு நகரங்களை மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பினர் குண்டுகளால் தாக்கியும் உள்ளனர். அதே இரவில் கொற்றபாற்ரோ பிராந்தியத்தின் தெற்குப் பகுதி நகரத்தை தாக்கியதுடன், அங்குள்ள நகர பிதாவையும், நகரசபை அங்கத்தவர்களையும், பிடித்துள்ளனர். அத்துடன் சுல்தான் குடறாற் பிரதேசத்தில் இரண்டு நகரங்களையும் தாக்கியுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் இராணுவமும், பொலிசும் மன்டர்னோ தீவில் உள்ள சகல நகரங்களையும் உசார் நிலையில் வைத்துள்ளனர். இதேவேளை பிலிப்பைன்ஸ் இராணுவம் உள்ளூராட்சி சபைகளின் உதவியுடன் 38.000 பேரைக் கொண்ட பிரசைகள் படை ஒன்றை உருவாக்கியுள்ளது. இப்படைப்பிரிவில் ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்களும் உள்ளனர். இவர்களுக்கு M 14 என்ற இரகத்தைச் சேர்ந்த நீண்ட தூரம் சுடக்கூடிய துவக்குகள் வழங்கப்பட்டுள்ளன. மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பின் செல்வாக்கு மிகுந்த பகுதிகளில் தாக்குதலை நடத்தவே இவ் ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பிற்கெதிரான இந்த யுத்தம் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மிகத் தீவிரம் அடைந்திருக்கிறது. மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பிற்கும், சர்வதேச இஸ்லாமிய அமைப்புக்களுக்குமிடையே உள்ள தொடர்புகள் சர்வதேச இஸ்லாமிய நாடுகளின் உணர்வுகள் இஸ்லாமிய விடுதலை அமைப்பிற்கு சாதகமாக இருக்கும் என்பது உண்மை என்பவற்றை நாம் இங்கே தட்டிக் கழிக்க முடியாது. தற்போது மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பின் தலைவராக இருக்கும் காசிம் சால்மாற்றுக்கும் சர்வதேச இஸ்லாமிய சகோதர அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. மின்டானோ தீவில் உள்ள அக்பர் முகாம் ஆசிய பிராந்தியத்தின் தலைமை ஸ்தாபனமாக சர்வதேச இஸ்லாமிய சகோதர அமைப்பினால் கருதப்பட்டுள்ளது.

"அல் கறகாற்றா அல்இஸ்லாமியா" என்ற அடிப்படைத் தீவிரவாத அமைப்பின் மீது இன்று அதிக கவனம் திரும்பியுள்ளது. இந்த அமைப்புடன் தனக்கு எதுவித தொடர்பும் இல்லை என்று மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பு அறிவித்துள்ளது. குறிப்பிட்ட அடிப்படைவாத அமைப்பின் பிரதான இலட்சியமாக மின்டானோ தீவை இஸ்லாமிய குடியரசாக மாற்றுவதுடன், இப் பகுதியில் உள்ள ஏனைய மதத்தலைவர்களை வெளியேற்றுவதும் ஆகும்.

இந்த அமைப்பு 1993ம் ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. அதி தீவிர இஸ்லாமிய கொள்கையுடைய தனிநபர்கள் ஒன்றிணைந்தே இந்த அமைப்பை உருவாக்கினர். அவர்கள் ஆட்களை கடத்துவது, குண்டுத் தாக்குதல்களை நடத்துவது, படுகொலைகள் செய்வது போன்றவைகளை கத்தோலிக்கர்கள் வாழும் பகுதிகளில் அதிகம் மேற்கொண்டனர். இறுதியாக 30 பேரைப் பணயக் கைதிகளாக அண்மையில் பஸ்லான் தீவில் பிடித்துள்ளனர். இவர்களில் 20 பேர் வெளிநாட்டவர்கள் ஆவர். அரசாங்கத்தை பிரச்சினையில் தள்ளவே பணய விடயத்தை அவர்கள் மேற்கொண்டதாக பேசப்படுகிறது. மேற்படி அடிப்படைவாத அமைப்பு அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டது என்றே பிலிப்பைன்ஸ் புரட்சிகர தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது. இந்த அடிப்படைவாத அமைப்பில் பிலிப்பைன்ஸ் இராணுவத்தின் 5 முகவர்கள் உள்ளனர் என்றும் புரட்சிகர தொழிலாளர் கட்சியின் அமைப்பினர் கூறுகின்றனர். அடிப்படைவாத அமைப்பினர் மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பினரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு ஆப்பு வைக்க முயல்கின்றனர்.

பிலிப்பைன்ஸ் இராணுவ அடிப்படைவாத அமைப்பின் செயற்பாட்டின் மூலம் மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பிற்கும் கத்தோலிக்க மக்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம்கள் கத்தோலிக்கர் என்ற பகைமையை நிலைபெறச் செய்வதே பிலிப்பைன்ஸ் இராணுவத்தின் இலக்காக இருக்கிறது.

யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மின்டானோ. தீவில் மக்கள் வறுமையில் வாடுகின்றனர். அரசாங்கம் இத்தீவின் மக்களுக்கு பல்வேறுபட்ட அநீதிகளை இழைத்ததன் காரணமாகவே இம் மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். தமது இலட்சிய பெரும் கொள்கைகளுக்காக இம் மக்கள் போராடவில்லை. இதை பிலிப்பைன்ஸ் இராணுவமும், பிராந்திய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளன.

பிலிப்பைன்ஸ் அரசு மின்டானோ தீவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகவே தீர்வு காண விரும்புகிறது. இதற்கு அமெரிக்க இராணுவ நிபுணர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கிறது.

கடந்த மே 8ம், 9ம் தேதிகளில் மின்டானோ தீவின் 2வது பெரிய நகரமான கொன்ரபாற்ரோ நகரின் விமான நிலையம், பிரதான பாதைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பினரின் தாக்குதலுக்கு நகரம் உள்ளானதால், இந்த நடவடிக்கையை பிலிப்பைன்ஸ் இராணுவம் மேற்கொண்டது.

மின்டானோ தீவின் அகதிகளானோரின் தொகையும், படுகாயங்களுக்கு உள்ளானோரின் தொகையும் பல்மடங்கு அதிகரித்து வருகிறது. இப்பகுதி மக்களுக்கு பிலிப்பைன்ஸ் புரட்சிகர தொழிலாளர் கட்சி பல்வேறு வழிகளிலும் மனிதாபமான உதவி புரிந்து வருகிறது. மோரோ இஸ்லாமிய விடுதலை அமைப்பினருடன் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்றனர். கடந்த மே மாதம் 7ம் திகதி எடுக்கப்பட்ட கணக்கின் அடிப்படையில், இது 5 லட்சம் மக்கள் மின்டானோ தீவின் மத்திய பகுதியில் இருந்து மாத்திரம் இடம் பெயர்ந்துள்ளனர். புரட்சிகர தொழிலாளர் கட்சியின் பின்வரும் வேண்டுகோளை சர்வதேச சமூகத்துடன் விடுத்துள்ளனர்.

1. மின்டானோ தீவில் பாதிகக்கப்பட்ட மக்களுக்காக உணவு, உடை, மருத்துவ வசதிகளையும், நிதி உதவியையும் புரியலாம்.
2. அமெரிக்காவினதும், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஜோசப் எஸ்டாவினதும் இராணுவ மேலாதிக்க முயற்சிகளை முறியடிக்க விடுதலைப் போராளிகளுக்கும், மின்டானோ மக்களுக்கும் பக்கபலமாக இருக்கவும்.
3. சர்வதேச சமூகம் ஜனாதிபதி எஸ்ராடாவுக்கு போரை நிறுத்த வேண்டுகோள் விடுப்பதுடன், மின்டானோ மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

## எரியும் வயிறுகளும் எரியாத அடுப்புகளும்

நாங்கள்
போர்க்களமண்ணின்
வறுமைச் செடியின்
இரத்தப் பூக்கள்
புதிதாய் முளைத்திருக்கிறோம்
அதிகமாய் எங்களுக்கு
அகதி முகாம்களைத்தான்
தெரியும்
ஒரு வேளை உணவிற்கு
வரிசையில் நிற்கின்ற
எமது பெற்றோரை.
தினமும் அழுது
ஆறாய் ஓடும் கண்ணீரை,
அறிந்திருக்கிறோம்.
குண்டு வெடிப்பையும்
குடல் கிழிந்து தொங்கும்
எங்கள் சகோதரரையும்
இடுகாட்டில் புதைக்கக்கூட
அனுமதியற்ற
அனாதைகளாய்
எமது கிழக்கு இருண்டு
போனது
நாங்கள் யார்
அடையாள அட்டையில்
மட்டும்,
இலங்கை மண்ணின்
நாளைய மன்னர்கள்
குண்டுகளுக்கு நாங்கள்,
ஆறடி மண்ணின் மட்டும்
சொந்தக்காரர்கள்.....
எரியும் வயிற்றோடும்
எரியாத அடுப்புகளோடும்,
என் நாளும் போராடும்
நாங்களும் போராளிகளே

-முத்து மாதவன் -

படிப்பகம்

www.padippakam.com



# பலிபீடத்தில் மலையக மக்கள்

**இக்கட்டுரை 1995ம் ஆண்டு வெளி யான விடிவு சஞ்சிகையில் பிரசுரிக் கப்பட்டது. இன்றுள்ள சூழ்நிலை யினை இது பிரதிபலிப்பதனைக் கருத்திற் கொண்டு இதனை மறு பிரசுரம் செய்கிறோம். - ஆர்-**

லையக மக்களின் மூலவேராகவும் கப்பெரிய பாட்டாளி வகுப்பாகவும் கழும் தமிழ் தோட்டத் தொழிலாளர்ளுக்கு இனிவரும் நாட்கள் கடினமான வால்கள் எதிர்கொள்பவையாக நக்கப்போகின்றன.

ரசாங்கத்தின் தான் தோன்றித்னமான செழுமையற்ற பொருளாதார ணுகுமுறை, பேரினவாத கும்பல்ளின் தாக்குதல்கள் பொலீஸ் த்துமீறல்கள் மலையக இளைஞர் வட்டையாடப்படல் தொழிலாளர் ரட்டப்படல் என்பனவற்றோடு புதிது திதாக முளைவிடும் சாதி, சமய ங்கங்களும் தொழிற்சங்கங்களும் லையக தொழிலாளர் வகுப்பை ர்மூலமாக்கி விட கங்கணம் கட்டி ற்கின்றன.

## னியார் மயப்படுத்தல் :

தாட்டத் தொழிற்துறையை நீண்டால குத்தகையடிப்படையில் 50 ருடங்களுக்கு ஏகாதிபத்திய பல்தசிய கம்பெனிகளுக்கு வழங்கவும் துதன் மூலம் தோட்டத்துறை நெருக்டியை சமாளிக்கவும், பாதுகாப்பு சலவினங்களுக்கு நிதி திரட்டவும் ரசாங்கம் முடிவு செய்துள்ளது. தாட்டத் தொழிற்சங்கங்களின் கடும் ஊட்சேபனைக்கு மத்தியிலும் இந்டவடிக்கையில் இறங்க அரசாங்கம் டிவு செய்திருப்பதன் உண்மை நாக்கம் தோட்டத் தொழிலாளர்களை மன்மேலும் சுரண்ட பல்தேசிய ம்பெனிகளுக்கு வழிவிடுவதன் மூலம் ம் ஏகாதிபத்திய எஜமானரையும் _லக வங்கி சர்வதேச நாணய நிதியம் ன்பனவற்றையும் திருப்திப்படுத்துதுதான். இடைக்காலத்தில் கடந்த ந்து ஆண்டுகளில் தனியார் கம்பெனி ர்வாகங்கள் தோட்டத் தொழிலாரை மிக மோசமாகச் சுரண்டுவதற்கு யன்று வந்திருக்கின்றன.

- வேலைப்பளு அதிகரிக்கப்பட்டமை.
- வேலை நேரம் கூட்டப்பட்டமை.
- சம்பளவுயர்வுகள் மறுக்கப்பட்டமை.
- கடும் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டமை.
- சமூக நல வசதிகள் வெட்டப்பட்டமை.
- பராமரிப்பு கைவிடப்பட்டமை.
- தோட்டவளங்கள் சுரண்டப்பட்டமை.
- மாற்றுப்பயிர் செய்கைக்கு பெருந்தோட்டம் அழிக்கப்பட்டமை.
- பெரும்பாலான தொழிலாளர் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டமை.
- 0. தொழிலாளர் தோட்டங்களின் மீது பொலீஸ் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை.

ஆகிய அம்சங்கள் குறித்து எவ்வித ளாய்வும் மேற்கொள்ளப்படாமல் த்தகையை நீடிப்பது அல்லது புதிதாக குத்தகைக்கு விடுவது திட்டமிடப்பட்ட சதியாகும். மலையக தொழிலாளர் வகுப்பின் முதுகெலும்பை முறிக்க ஆளும் வர்க்கம் எடுக்கின்ற இந்நடவடிக்கை மலையக மக்களை பலிபீடத்தில் ஏற்றுவதற்கு சமமானதாகும்.

## முக்கூட்டு ஒப்பந்தம்:

தோட்டத்துறை தொழிற்சங்கங்கள் நீண்ட கால குத்தகைக்கு தோட்டங்கள் கையளிக்கப்பட்டால் அரசாங்கம், கம்பெனிகள், தொழிற்சங்கங்களுக்கிடையிலான முக்கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமெனவும் அதன் மூலம் தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் கோருகின்றன.

உண்மையில் இலங்கையின் மிகப் பெரிய பாட்டாளி வகுப்பென்ற தன் முழுப்பலத்தையும் பிரயோகித்து தம் நலன்களை பாதுகாக்க முடியவில்லையென்றால் முக்கூட்டு ஒப்பந்தம் எவ்வகையில் "நலன்களை" பாதுகாக்கும் யாருடைய நலன்களை பாதுகாக்கும்? உண்மையில் தோட்டத் தொழிற்சங்கங்கள் தம் கையாலாகாத்தனத்தை மூடிமறைக்க முயலாமல் தொழிலாளர்களை போராட்டத்திற்கு தயார்படுத்த வேண்டும். அதுவே தொழிலாளர் நலன் பேணும் சிறந்த வழியாகும்.

தோட்டங்களை அரசாங்கம் நடத்த முடியாவிடில், தொழிலாளர் நிர்வாக குழுக்களிடம் தோட்ட நிர்வாகங்களை கையளிக்குமாறு கோர வேண்டும் எங்களது நலன்களை நாமே தீர்மானிப்பது மட்டுமே எமக்குள்ள ஒரே வழி?

மாறாக துரோகத்தனமான சந்தர்ப்பவாதம் காட்டும் தொழிற்சங்கங்களால் முழு தொழிலாளர் வகுப்பிற்கும் பெருங்கேடு வந்து சேரும்.

## பேரினவாத தாக்குதல்கள் :

மலையக மக்களுக்கெதிரான வன்முறைத் தாக்குதல்கள் மிகவும் ஒன்றிணைந்த முறையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கனவுகளின் மேல் சிருஷ்டிக்கப்பட்டு கானல் நீராகிப் போயிருக்கின்றது. ஓவல, பிரே, கோண, எடிக்கா, நரகஸ்தனை, கிக்கினாகந்த ஆகிய தோட்டங்கள் இதுவரை தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன. குறிப்பாக தென்புற மாவட்டங்களான காலி, மாத்தறை, களுத்துறை மாவட்டங்களிலும் மாத்தறை மாவட்டத்திலும் தமிழ் தொழிலாளர்கள் மீதான தாக்குதல்கள் அரசியல் வாதிகள் பாதுகாப்புத் துறையினரின் ஆசியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

## இளைஞர் கைதுகள் :

மலையக இளைஞர்கள் சந்தேக நபர்களாக்கப்பட்டு பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகிறது. நுவரெலியா, மாவட்டத்தில் பெருமளவான சுற்றி வளைப்புக்களும் கைதுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த ஆகஸ்ட் மாத பொதுத் தேர்தலின் பின்னர் கைதான மலையக இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

வைத்தியர் சாந்தகுமார், மலையக விடுதலை முன்னணி அமைப்பாளர் பிரான்சிஸ், மலையக விடுதலை முன்னணியினர் எனக் கூறப்படும் முத்து ஆகியோரும் அடங்குகின்றனர். முழு மலையகத்தின் நுழைவாயிலும் கடும் சோதனை கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதும் உறவினர் நண்பர்களை தேடிவருவோர் கைதாக்கப்படுவதும் அன்றாட நிகழ்வாயிருக்கின்றது.

தலைநகர் கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்கள் சுற்றிவளைப்பு. கைதுகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள்.

தோட்டத்துறையில் தற்காப்பின் நிமித்தம் போரால் தொழிலாளர்களைப் பயங்கரவாதிகளாக சித்திரிப்பதில் பாதுகாப்புத்துறை புலனாய்வாளர்கள் முன்னிற்கிறார்கள். களுத்துறை கிக்கினாந் தோட்டத் தொழிலாளர் கசிப்பு வியாபாரிகளான (நாட்டு) கிராமிய மக்களால் தாக்கப்பட்டு செல்லையா என்ற தொழிலாளி கொலை செய்யப்பட்டுமுள்ளார். எனினும் 15 தமிழ் தோட்டத் தொழிலாளரை ஒப்படைக்குமாறு கோரிய பொலீஸ் அவர்களை சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ளது.

ஜுன் 4ம் திகதி காலி நகஸ்ததென தோட்டத் தொழிலாளர் தாக்கப்பட்டு லயன் எரிக்கப்பட்டதோடு 8 வயது சிறுமி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்களைத் தட்டிக் கேட்கவோ தடுத்து நிறுத்தவோ முடியாத நிலையில் மலையக தொழிற்சங்கங்களும் அரசியல் தலைவர்களும் இருப்பது மலையக மக்களின் நலனை விட தம் நலனை கைவிடத் தயாரில்லாத நிலைப்பாட்டை அம்பலப்படுத்துகின்றது.

நோர்வூட் தென் மதுரை தோட்டப் பெண் தொழிலாளர் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடித்த நோர்வூட் பொலீசார் தொழிலாளர்கள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலைகள் ஆக்கிரமிப்பு மையங்கள் :- சனாதிபதி பிரேமதாசாவின் 200 ஆடைத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தின் ஒரு படியாக மலையகத்தின் பல பகுதியில் தோட்டக் காணிகளில் ஆரம்பிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் படிப்படியாக குடியேற்றங்களாக மாறிவிட வாய்ப்பிருக்கின்றது.

இவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசாலமான இடவசதியும் ஆளணியிடலில் காட்டப்பட்டுள்ள பராபட்சமும் இதனை முன்னுணர்த்துகின்றது.

மேலும் இவ் ஆடைத் தொழிற்சாலைகளில் இரவு, பகல் இரண்டு முறைகளில் இளம் பெண்கள் மிக மோசமாக சுரண்டப்படுவதோடு, பாலியல் இச்சைகள் குறைந்த சம்பளம் போதிய சுகாதார வசதிகள் இல்லாமை, பாதுகாப்பின்மை, தொழில் நிரந்தரமின்மை, தொழிற்சங்க உரிமையின்மை என பல்வேறு ஒடுக்கு முறைகளை சந்தித்து வருகின்றனர்.

## கல்வி :

மலையக தமிழ் மாணவரின் கல்வி திட்டமிட்டு பாலடிக்கப்பட்டு வருகின்றது. மிகக்கொடிய ஆசிரியர் பற்றாக்குறை, உயர் வகுப்புகளுக்கும் போதிய பட்டதாரி ஆசிரியரின்மை என கல்வி அழிப்பு மேற்கொள்ளப்படுகிறது. கடந்த ஆண்டின் சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் மலையகத்தின் கல்வி நிலையை அம்பலப்படுத்தியிருக்கின்றது. சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் வடகிழக்கில் இருந்து வந்த அகதி மாணவரேயாவர். இன்னுமொரு எடுத்துக் காட்டு பத்தனைக் கல்விக் கல்லூரியாகும். இக்கல்லூரியின் தனித்துவத்தை சிதைத்தும், அதன் முக்கியத்துவத்தைக் குறைத்தும் இட ஒதுக்கீட்டில் 25 % கப்ளீகரம் செய்யப்பட்டுள்ளமை இதனைக் குறிக்கின்றது. மத்திய மாகாண பாடசாலைகளில் 18 இஸ்லாமிய மாணவனுக்கு ஒரு ஆசிரியர், 23 சிங்கள மாணவருக்கு ஒரு ஆசிரியர் 49 தமிழ் மாணவருக்கு ஒரு ஆசிரியர் இருப்பது மலையக தமிழ் மாணவரின் கல்விநிலையைக் காட்டும் இன்னொரு எடுத்துக் காட்டாகும்.

ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் சித்தியடையும் எந்தத் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கும் அரசாங்கத்தின் உதவி வழங்கப்படுவதில்லை.

பல்கலைக்கழக அனுமதியில் இனவீதாசாரப்படி 540 மலையக மாணவர்கள் ஆண்டு தோறும் அனுமதி பெற வேண்டும். ஆனால் 33000 மாணவர் கல்வி பயிலும் இலங்கை தேசிய பல்கலைக்கழகங்களில் மொத்தம் 200க்கும் குறைவான மலையக மாணவரே இருக்கின்றனர் என்பதும் இது மொத்த மாணவர் தொகையில் கிட்டத்தட்ட 0.5% சதவீதமாகும். மொத்த மலையக மக்களின் குடித்தொகையில் (அண்ணளவாக 12 லட்சம்) 0.01% என்பதையும் கொண்டு மலையகத்தின் கல்வி நிலையை அறிய முடியும். இவர்களில் 5% மாணவர் மட்டுமே தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாவர். ஏனையோர் இந்திய வம்சாவளி நகர்ப்புற முதலாளிகள் தோட்ட வேலையாளர்கள் போன்ற நடுத்தர மேட்டு குடிகளின் பிள்ளைகளாவர். களுத்துறை மாவட்ட 19 தமிழ் தோட்டப் பாடசாலையிலும் பதுளை 40 பாடசாலையிலும் சிங்கள அதிபர் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பொன். பிராபாகரன்

தொடர்ச்சி அடுத்த இதழில்

படிப்பகம்

www.padippakam.com






# ஒரு இரயில் நிலையத்தின் கதை

இக்கதையில் வரும் ரெயில் நிலையம் போலவே நம் நாட்டிலும் ஆயிரக்கணக்கான ரெயில் நிலையங்கள் உள்ளன. தனியார் மயத்தைத் தீவிரமாக அமுலாக்க அரசு உள்ளது. சேவைத்தரம் உயர தனியார் மயமே தீர்வு என்று பேசும் மேட்டுக்குடியினரும் உள்ளார்கள். அவர்களுக்கு ஐரோப்பாவிலிருந்து பல ஆடம்பரப் பொருட்கள் தேவைப்படுகின்றன. நமக்கு இந்தக் கதை தேவைப்படுகிறது. பிரண்ட்லைன் இதழில் (சூலை - 7) ஜெயாதி கோஷ் எழுதிய கட்டுரைக்குள் இடம் பெற்ற கதை இது. பொருள் சிதையாமல், சில திருத்தங்களுடன் மொழியாக்கம் செய்து தருகிறோம்.



முன்னொரு காலத்தில் ஹாலந்து நாட்டில் ஒரு சிற்றூர் இருந்தது. அந்தச் சிற்றூரில் ஒரு சின்ன ரயில் நிலையமும் இருந்தது. முன்னொரு காலத்தில் என்று சொன்னதால் ரொம்பப் பழைய காலத்தில் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

ஹாலந்து நாட்டில் பொதுவாகவே ரயில் வசதி அதிகம். அதற்காக சின்னச் சின்ன ரயில் நிலையங்களிலெல்லாம் கூட்டம் அலைமோதும் போலிருக்கிறது என்று கற்பனை செய்து கொள்ளாதீர்கள். பெரிய நகரங்களில் தான் பெரிய கூட்டம். சின்ன ரயில் நிலையத்தில் அப்படி ஒன்றும் பெரிய அளவு பயணிகள் கூட்டம் இருக்காது.

ஆகையினால் இப்படிப்பட்ட சின்ன ரயில் நிலையங்களில் ஸ்டேசன் மாஸ்டர் ஒருவர் மட்டும்தான் இருப்பார். அவர்தான் டிக்கட் கொடுக்க வேண்டும். பயணிகள் ஏதாவது விவரம் கேட்டால் அவர்தான் பதில் சொல்ல வேண்டும். ஸ்டேசன் மாஸ்டர் வேலையும் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லாம் நம்மூர் போலத்தான்.

சரி, நாம் கதைக்கு வருவோம். அந்த சிற்றூரின் ஸ்டேசன் மாஸ்டருக்கு வேலை அவ்வளவு கடுமையாக இல்லாததால், ரயிலுக்குக் காத்திருக்கும் பயணிகளுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார். யாராவது ஏதாவது விபரம் கேட்டால் பொறுமையாக விளக்கிச் சொல்லுவார்.

எல்லோருக்கும் அவரை ரொம்பப் பிடித்திருந்தது. பார்த்தவுடனே சிரித்த முகத்துடன் வணக்கம் சொல்லும் மனிதனை யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்? பயணிகளைப் பொறுத்தவரை அவர் ரயில் நிலையத்திலுள்ள ஒரு நண்பர். ஸ்டேசன் மாஸ்டர் என்பதெல்லாம் அடுத்தபடிகள்.

இப்படியிருக்கையில் அந்த நாட்டின் ரயில்வே துறைக்கு ஒரு சோதனை வந்தது. சோதனை ஹாலந்துக்கு மட்டுமல்ல, ஐரோப்பாவுக்கே வந்த சோதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

'பொதுத் துறைகளில் ஆட்குறைப்புச் செய்ய வேண்டும். அநாவசியமான தொழிலாளிகளைக் கழித்துக் கட்டிவிட்டு அவர்களுக்குப் பதிலாக கம்ப்யூட்டர்களையும் எந்திரங்களையும் புகுத்தலாம். இதனால் சேவையின் தரம் உயரும். லாபமும் அதிகரிக்கும்" என்ற கொள்கை ஐரோப்பா முழுவதும் அமுலுக்கு வந்தது.

பாவம் நம்முடைய இனிய நண்பனான ஸ்டேசன் மாஸ்டர் இனித் தேவையில்லாதவர் ஆகிவிட்டார். அவருடைய வேலையைச் செய்ய ஒரு எந்திரம் வந்து விட்டது. அது டிக்கட் கொடுக்கும், பாக்கி சில்லறை கொடுக்கும், ரயில் நேரம் பற்றிய தகவல்களையும் கொடுக்கும். அவ்வளவு புத்திசாலித்தனமான எந்திரம்! அதே நேரத்தில் ஸ்டேசன் மாஸ்டருக்குக் கொடுத்த சம்பளத்தை ஒப்பிட்டால் செலவும் மிகக் குறைவு!

இப்போதெல்லாம் நெரிசல் நேரம் தவிர மற்ற நேரங்களில் அந்தச் சின்ன ரயில் நிலையம் வெறிச்சோடிக் கிடக்கிறது. ஸ்டேசன் மாஸ்டர் நீக்கப்பட்ட பிறகு அந்த ரயில் நிலையத்திற்கின்று ஒரு ஆள் கூடக் கிடையாது.

தனியார்துறை, பொதுத்துறை இரண்டிலுமே ஆட்குறைப்பு ஒரு கொள்கையாக அமுல்படுத்தப்பட்டதால் எங்கு பார்த்தாலும் வேலை நீக்கம் தான். இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதும் குதிரைக் கொம்பாகி விட்டது.

வேலையில்லாத இளைஞர்கள் தெருவில் கும்பல் கும்பலாக அலைவது இப்போதெல்லாம் சகஜமான காட்சியாகி விட்டது. ஆள் அரவமே இல்லாத ரயில் நிலையம் இளைஞர்கள் கூடுவதற்கு வசதியான இடமாகி விட்டது. வீடில்லாதவர்கள் சில பேருக்கும் ரயில் நிலையமே புகலிடமானது. அதிகம் கூட்டமில்லாத நேரங்களில் ரயில் நிலையத்தில் நிலவிய இந்தச் சூழ்நிலை பயணிகளுக்கு இனம் புரியாத அச்சத்தை ஏற்படுத்தியது. பயணிகளுக்கும் இளைஞர்களுக்குமிடையே அவ்வப்போது சில வாய்த் தகராறுகளும் ஏற்பட்டது.

சட்டம் - ஒழுங்கு நிலைமை சரியில்லை. ரயில் நிலைய நிர்வாகமும் சரியில்லை. என்று பயணிகள் புகார் செய்யத் தொடங்கினர். உடனே நிர்வாகம் ரயில் நிலையத்தில் ஆங்காங்கே விளம்பரப் பலகைகளை வைத்தது. "அங்கே உட்காராதே, இங்கே நிற்காதே" என்பது போன்ற உத்தரவுகள் அதில் எழுதப்பட்டிருந்தன.

நல்ல விதமாக எடுத்துச் சொல்வது ஒரு விதம். இப்படி அதிகார தோரணையில் உத்தரவு போட்டு அதைக் கடைப்பிடிக்கச் செய்வதென்றால் அது கொஞ்சம் சிரமம் தான். சும்மாயிருப்பவர்களைக் கூட இந்த மாதிரி அறிவிப்புகள் தூண்டி விடுகின்றன.

பயணிகளுக்கும் இளைஞர்களுக்கும் நடந்து கொண்டிருந்த சின்னச், சின்னத் தகராறுகள் ஒருநாள் விபரீதத்தில் போய் முடிந்தது. ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களை சில இளைஞர்கள் அடித்து நொறுக்க, அந்த நேரம் பார்த்து அங்கே வந்த பயணி ஒருவர் அதைத் தடுக்க, விவகாரம் கொலையில் போய் முடிந்தது. அந்தப் பயணி கொல்லப்பட்டு விட்டார். அந்தக் கொலைக்கு என்ன காரணம் சொல்வது? இந்த மாதிரி சம்பவங்களுக்கெல்லாம் "அர்த்தமில்லாத வன்முறைகள்" என்று விளக்கம் சொல்கிறார்கள்.

"நாட்டில் சட்டம் - ஒழுங்கு ரொம்பவும் கெட்டுப் போய்விட்டது. காவல், கண்காணிப்பு, கெடுபிடியை அதிகப்படுத்தினால் தான் ஒழுங்கை நிலைநாட்ட முடியும்" என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட்டு விட்டது. இப்படிப்பட்ட கருத்து நாடெங்கும் வளர்ந்து வருகிறது என்ற விசயம் அரசுக்கும் தெரியாமலில்லை. கைவசம் சில "புதிய" திட்டங்களை வைத்திருந்தது அரசாங்கம்.

"ரயில் நிலையத்துக்கு வருவோர் போவோரின் நடவடிக்கைகளையெல்லாம் கண்காணிக்க வேண்டும். ரயில்வே நிர்வாகத்தின் கட்டளைகளை தயவு தாட்சண்யமின்றி அமல்படுத்த வேண்டும்" என்ற உத்தரவுடன் எல்லா ரயில் நிலையங்களிலும் தனியார் போலீஸ் படைகளை அரசாங்கம் நியமிக்கக்கூடும்.

நம் சிற்றூரின் சின்ன ரயில் நிலையத்திற்கு வரப்போகின் போலீஸ்காரரின் பணி ரொம்ப கடினமானது. இன்னொரு விதத்தில் பார்த்தால் ஆபத்தானதும் கூட. அவருடைய வேலைக்கு உத்திரவாதம் இருக்கப் போவதில்லை. ஏதாவது ஒரு சிறிய தவறு நடந்தால் போதும் - அவரைக் கூலிக்கு அமர்த்தியிருக்கும் தனியார் போலீஸ் நிறுவனம் அடுத்த கணமே அவரைத் தூக்கி எறிந்து விடும்.

எனவே அவருடைய நடவடிக்கைகள் கொஞ்சம் கடுமையாக இருந்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. பயணிகளிடம் அவரால் இன்முகத்துடன் நடந்து கொள்ள முடியாது. கொஞ்சம் சிடு சிடுவென்று தான் இருப்பார். மேலும் கையில் துப்பாக்கியும் வைத்திருப்பார்.

எப்படியோ, நம்முடைய அழகான சின்ன ரயில் நிலையத்தில் ஆளில்லாத குறை தீரப் போகிறது. இனி டிக்கட் கொடுக்கும் எந்திரத்துடன் ஒரு மனிதரையும் நாம் பார்க்கலாம்.

ஆனால் என்ன, நம்முடைய பழைய ஸ்டேசன் மாஸ்டரின் சிரித்த முகம், இனிமையான பேச்சு, அவரைப் பார்த்தவுடனே நமக்குள் தோன்றும் சிறியதொரு மகிழ்ச்சி.... இதெல்லாம் இருக்காது.

டிக்கட் எந்திரம் இருக்கும். அதன் பக்கத்தில் இன்னொரு எந்திரம் நின்று கொண்டிருக்கும்.

## மோகம்

விலக்க முடியாத
போர்வையின்
கணகணப்பை விலக்கி
நான்
உன்னைத் தேடுகிறேன் நீ
அங்கு இல்லை
நாம் பகிர்ந்து கொண்ட
காதலும்
இனிய முத்தங்களும்,
நினைவுகளும் மட்டுமே....
உனது மார்பில் கனவு
காணவோ
உனது இதழ்களைச்
சொந்தமாக்கி விடவோ
உனது உடலை
ரசித்திருக்கவோ
அணைத்திருந்து விவாதங்கள்
செய்யவோ,
மெல்லிய இரவில் உனது
தேகம் தந்துவிட்ட
நோக்கத்தை
நினைத்திருக்கவோ.....
எல்லாத்திற்குமாகவே
உன்னை என்னவளாக்கவோ
முடியாதிருப்பினும்
அன்பைக் கொடுக்கவும்
அன்பை எடுக்கவும்
எமக்கு இருக்கிற உரிமை
பறிபோகாதவரை நாம்
காதல் செய்வோம்.

ரஞ்சி பி. ராங்போர்ட் (சக்தி)

படிப்பகம்

www.padippakam.com



## ...ங்கலாகா நடவடிக்கையால் 4000 பேர் வேலையிழப்பு

...றைமுகத்தில் இருந்து ...பாதிகளை வெளியேற்றிக் ...காடுப்பதற்கு நாடு முழுவதும் ...000 க்கும் மேற்பட்ட கிளியரிங் ...கவர் நிலையங்கள் உள்...ன. இவற்றில் 6000 க்கும் ...மற்பட்ட வோர்ப் எழுது...வினைஞர் கடமையுரிகின்றனர். ...வர்களின் தொழிலுக்கு ...ற்போது அச்சுறுத்தல் ...றபட்டுள்ளது.

...அனுபவமே அத்திவாரம்" ...ன்பது போல் இந்தத் தொழி...லில் இவ்வளவு காலமும். ...அனுபவம் நிறைந்தவர்களே ...டமை புரிகின்றனர்.

...ங்க இலாகாவினர் புதிதாக ...ரீட்சையை அறிமுகப்படுத்தி ...ந்த துறையில் அனுபவத்துடன் வேலை பார்ப்பவர்களை நிறுத்தி விட்டு புதிதாக ஆட்களை வேலைக்கு எடுக்கப்போகிறது.

உண்மையில் இத்தகைய திடீர் நடவடிக்கைக்குப் பின்னணியில் பெரிய திட்டம் ஒன்று உள்ளதாக நம்பப்படுகிறது. இவ்வளவு காலமும் பொருட்களை வெளியேற்றிக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த உள்ளூர் முகவர்களுக்கு இந்த வேலையை வழங்காது, பல்தேசிய கம்பனிகளிடம் மேற்படிப் பொருட்களை வெளியேற்றிக் கொடுக்கும் நடவடிக்கையைக் கையளிக்கப்போகிறது.

இது ஒரு அநியாயமான நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கையில் 4000 க்கும் மேற்பட்ட உள்ளூர் தொழிலாளர்கள் வேலையிழக்கப் போகிறார்கள். உண்மையில் அரசாங்கத்திற்கு இந்த நாட்டு மக்கள் மீது அக்கறை எதுவும் இருப்தாகத் தெரியவில்லை. அப்படி இருந்திருக்குமானால், இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு இலவசமாக சிறந்த பயிற்சியை வழங்கியிருக்கலாம். அங்ஙனம் வழங்காது அந்தத் தொழிலாளரை நடு ரோட்டில் விடுவது அநியாயமாகும்.

**(எம். ரிஸ்வான் பாய்ஸ்)**

...6ம் பக்கத் தொடர்ச்சி

## சீதனப் பிரச்சினையும் ....

...ஆணாதிக்கத்திற்குமான ...மொட்டந்தலை முழங்கல் ...றவு புலப்படலாம். சமூகப் ...பிரச்சினையொன்றை தமது ...விருப்பு வெறுப்புகளோடோ ...ழுந்தமான முடிவுகளோடோ ...சீர்திருத்தவாதிகளும் இலக்...கிய கர்த்தாக்களும் ...த்திஜீவிகளும் அணுகுவது ...ஆரோக்கியமான ...டிவெதனையும் தருவதற்குப் ...திலாக தவறான வழிநடத்...தலாகவே அமைந்து விடுகி...ன்றது. அவ்வாறாயின் இந்த ...சமூகப் பிரச்சினைக்குத் தீர்வு ...எவ்வாறு காணப்படலாம்.

...சீதனம் கொடுக்கும் வசதியு...ள்ளவர்கள் அதிகமாக உள்ள ...நிலையில் இது சமூகப் போரா...ட்டம் ஒன்றிற்கான அடிப்...டையைப் பெறப் போவதில்லை. ...றுபுறத்தில் சாதி, மத, குலத் ...தொடர்புகள் போன்ற காரணி...களின் இறுக்கமும் பிரச்சி...னையை அழியவிடப் போவதி...ல்லை. இவ் இறுக்கங்களின் ...தளர்வும், விசுவாசமான காதல் ...திருமணங்கள், சீதனப் பேரம் ...பேசலிலிருந்து விலகிய ...திருமணங்கள் போன்றன சமூக ...மட்டத்தில் வரவேற்கப்பட்டு, ...உரிய ஊக்குவிப்பு வழங்கப்...படுவதும் இதன் வேகத்தைத் ...தணிக்க உதவலாம். ...இவ்வாறான சீதன முதலீடு ...அற்ற வாழ்க்கையைத் தொட...ங்கும் ஆணும் பெண்ணும் ...பொருளாதார ரீதியிலும் சமூக ...வாழ்க்கைத் தர நிலையிலும் ...எதிர்ப்படும் பிரச்சினைகளுக்கு ...சலிக்காது முகங்கொடுக்கக் ...கூடியவர்களாகவும் மற்றவ...ர்களுடன் ஒப்பிட்டுத் தமது ...நிலையைத் தாமே துன்ப ...ஏக்கங்களுடன் விமர்சித்துப் ...பார்ப்பதனை தவிர்த்துக் ...கொள்ளத் ...திராணியுள்ளவர்களாகவும் ...தம்மைத் தயார்படுத்திக் ...கொண்டால் சீதனப் ...பிரச்சினையின் வேகத்தினைக் ...குறைப்பதற்கான ஒரு ...பொதுமுயற்சியாக அதனைக் ...கருதலாம். மிக குறைந்தளவில் இது ஆங்காங்கு ஏற்படும் அறிகுறிகள் இருந்தாலும் வாழ்க்கை முறை ஒழுங்கமைப்பு இதனை ஊக்குவிப்பதாக இல்லை. இது அரசாங்க முயற்சியினூடாகவோ அல்லது பொது நிறுவனங்களுக்கூடாகவோ இவர்களுக்கு சில அடிப்படை பொருளாதார உதவியினை வழங்க முற்படுதல் ஓரளவில் சுமையைத் தடுக்க உதவலாம். இதற்கும் அப்பால் சமூக மட்ட மாற்றம் ஒன்றிலாவது பெரிதான ஒரு தீர்வினை சீதனப் பிரச்சினையைப் பொறுத்து இப்போதைக்கு எதிர்பார்க்க முடியாது.



## வெற்றிக்கொடி கட்டு சற்று வேறுபட்டு உள்ளது

ஆபாசக் காட்சிகள், இரட்டை அர்த்த நகைச்சுவைகள் என்ற வட்டத்தினுள் இருக்கும் தமிழ்ப் படங்களை விட சற்று மாறுபட்ட போக்கில் இப்படத்தை சேரன் கொடுத்துள்ளார்.

வெளிநாடு சென்று பணம் உழைக்க வேண்டும் என்ற அவாவினால், தாம் வாழ்ந்த மண், தாய், சகோதரிகளின் நகைகள் என்பவற்றை விற்று போலி முகவர்களிடம் ஏமாறும் இளைஞர்களைப் பற்றியதாக கதை அமைந்துள்ளது. போலி முகவராக வரும் ஆனந்தராஜிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு, மண்டபம் ஒன்றில் தங்கியிருக்கும் இளைஞர்கள், ஏமாற்றப்பட்டு விட்டோம் என அறிந்தவுடன் படும் அவஸ்தைகள் மனதை உருக்குகின்றது. பணம் கொடுத்து ஏமாந்து விட்டோம் என்ற செய்தியுடன் வீடு போக முடியாது என்று முடிவு எடுத்த முரளியும், பார்த்திபனும், இறுதியில் பார்த்திபன் வீட்டில் முரளியும் , முரளி வீட்டில் பார்த்திபனும் செல்கின்றனர்.

மாறுபட்ட இடங்களில் இருக்கும் முரளியும், பார்த்திபனும் அங்கு படும் அவஸ்தைகள் நன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மிகவும் அப்பாவியாக நடிக்கும் சாளியின் நடிப்பு நன்றாக உள்ளது. சாளி பார்த்திபன் இருக்கும் இடத்துக்கு வருவதும், அங்கே தான் ஏமாந்த கதையைக் கூறி அழுவதும், இந்த குழப்பத்தை கண்டு மனோரம்மா திகைப்பதும் இறுதியில் சாளிக்கு பயித்தியம் என்று பார்த்திபன் கதையை மாற்றுவதும் நன்றாக அமைந்துள்ளது.

வழமை போல் வடிவேலும், பார்த்திபனும் தோன்றும் காட்சிகள் சிரிப்பை ஏற்படுத்துகிறது. கிராமிய சூழல், கிராமிய மக்களின் கதைகள் என்பன நன்றாக அமைந்துள்ளன. முரளிக்கும் பார்த்திபனின் தங்கைக்கும் ஏற்பட்ட காதல் மிக யதார்த்தமாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

பணம் உழைக்க வேண்டும் என்ற மோகத்தில் வெறித்தனமாக இருக்கும் இளைஞர்களுக்கு இப்படம் நல்ல எடுத்துக் காட்டாக அமையும்.

- மாரா -

## இராகலை அல்மா தோட்ட மக்களின் அவலநிலை

**(ஆர். கே. பெருமாள்)**

அல்மா தோட்ட சுற்றாடல், பாதைகள் தோட்டத்துறைமார் இருக்கும் பங்களாக்கள் மிகவும் செழிப்புடனும் வனப்புடனும் காட்சி தருகிறது. ஆனால் மேற்படி தோட்டத்துக்கு மாடாய் உழைக்கும் தோட்டத் தொழிலாளர் வாழ்வில் எத்தகைய வசந்தமும் வீசவில்லை. அடிப்படை வசதிகள் இன்றியும், வாழ்க்கைச் செலவு உயர்வாலும் இம்மக்கள் பெருந்துயருடன் வாழ்கின்றனர். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் இப்பகுதியில், போதிய மருத்துவ வசதிகள் இல்லை. சீரான போக்குவரத்து இல்லை. பெருந்தொகை மாணவர்களுக்கு சிறிய பாடசாலை மின்சாரவசதி இன்மை போன்ற பல்வேறு காரணிகளின் தாக்கம் இம்மக்களை வாட்டி வதைக்கிறது.

இவ்வளவு பின்தங்கிய நிலையில் இருக்கும் இம் மக்கள் மத்தியில் அரசாங்கம் பாரபட்சமான முறையில் நடந்து கொள்கிறது. அண்மையில் 10 ஆயிரம் ரூபாய் கடன் கொடுப்பதற்கான விண்ணப்பங்கள் இப்பகுதியில் கோரப்பட்டன. அல்மா தோட்டப் பகுதியில், 50க்கும் மேற்பட்ட தமிழ் தோட்டத் தொழிலாளர் விண்ணப்பித்திருந்தனர். இந்த விவசாயக் கடனை அரசாங்கம் இப்பகுதியில் வாழும் பெரும்பான்மை இனத்தவருக்கே வழங்கியுள்ளது. தற்போது உள்ள கஷ்டமான நிலையில் கடனை நம்பியிருந்த இப்பகுதி விவசாயிகள் விரக்தி நிலையில் காணப்படுகின்றனர். தமிழ் மக்கள் என்ற காரணத்தினால் தான் கடன் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுகிறது என இவ்விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

இப்பகுதியில் இருந்து கல்வி கற்பதற்காக கிறுமண்டு பகுதியில் இருக்கும் பாடசாலைக்கே பிள்ளைகள் செல்கின்றார்கள். இப்பாடசாலை 1893ம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடத்திலேயே இயங்குகின்றது. மிக நீண்ட காலமாக இப்பாடசாலைக்கட்டிடம் திருத்தப்படாது இருக்கிறது. போதிய தளபாடங்கள் இன்மையால் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அல்மா தோட்ட மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் பெரும் ஊழல் இடம்பெற்றுள்ளது. 1994ம் ஆண்டு, பெப்ரவரி மாதம், தோட்டத் தொழிலாளருக்கு மின்சாரம் வழங்குவதற்கு பணம் அறவிடுவதென முடிவு எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் 150 முதல் 200 ரூபா வரை மாதா மாதம் தோட்டத் தொழிலாளர் வேதனத்தில் இருந்து கழிப்பதென முடிவு எடுக்கப்பட்டது. 1998ம் ஆண்டுடன் இப்பணம் கழித்து முடிக்கப்பட்டது. இதைவிட வயறிங் செய்வதற்காக 2650/= ரூபா ஒவ்வொரு தோட்டக் குடும்பத்திடமும் அறவிடப்பட்டது. ஆனால் 1100 ரூபா பெறுமதியான பொருட்களை வயறிங்கில் செலவு செய்யப்பட்டுள்ளது. நிப் சுவிச்சும் போடப்படவில்லை. இவ்வளவு நடைபெற்றும் 75 வீட்டுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. மிகுதியான வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக பல்வேறு புகார்கள் பல்வேறு அரச அமைப்புக்களிடம் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாக எத்தகைய நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அல்மா பகுதியில் இருந்து இராகலைக்கு வருவதற்கு மக்கள் வெகுதூரம் நடந்தே செல்கின்றனர். வயது முதிர்ந்தவர்கள், நோயாளர்கள், சிறு குழந்தைகள் பாடசாலை மாணவர்கள் போன்ற அனைத்துப் பிரிவினரும் நடந்தே வெகுதூரம் வருகின்றனர். பஸ்சேவை இப்பகுதிக்கு இல்லாததால் மக்கள் பெரும் துன்பப்படுகின்றார்கள். மலையக மக்களுக்காக பலர் இன்று குரல் கொடுக்கின்றார்கள். இதன் பலனை ஒரு சிலர் அனுபவிக்கின்றனர். ஆனால் மலையகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு எத்தகைய நன்மையும் சென்றடையவில்லை. தோட்டத்துரைமார்களும், மலையக பிரதான அரசியல்வாதிகளின் குடியிருப்புகளும் சகல வசதிகளுடன் காட்சி தருகின்றன.

அல்மா பகுதியில் கடந்த இரண்டு மாதத்ததிற்குள் 15க்கும் மேற்பட்டோர் மரணத்தை தழுவியிருந்தனர். இவ்வளவு பெருந்தொகை மரணங்கள் இப்பகுதியில் நிகழக் காரணம் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். போசாக்கின்மை, போதிய மருத்துவ வசதியின்மை, தொற்று நோய்கள், வருமானம் இன்மை, போன்ற பல்வேறு காரணிகள் மரணத்துக்கான காரணிகளாக அமைகின்றன.

தமிழ் மக்கள் என்ற காரணத்தினாலும் இன்று மலையக மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். பிறப்பு சாட்சி பத்திரம், அடையாள அட்டை போன்றவை கிடைக்காமையினால் பல்வேறு சிரமங்களைப் பொது மக்கள் எதிர்நோக்குகின்றனர். தொழிலுக்காக மலையகத்தை விட்டு வெளியே சென்ற பல மலையக இளைஞர்கள் இன்றும் சிறையில் உள்ளனர். அல்மா பகுதியில் இருந்தும் பல தமிழ் இளைஞர்கள் மேற்படி காரணங்களுக்காக சிறை வைக்கப்பட்டு மீண்டுள்ளனர்.

அல்மா தோட்ட மக்களுக்கு உரிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கும் என்ற நம்பிக்கையை இப்பகுதி மக்கள் இழந்து விடுகின்றனர். தமது தேவைக்காக போராட்டங்களை வெகு விரைவில் மக்கள் நடத்துவார்கள் என்பதே எனது நம்பிக்கை.

படிப்பகம்

www.padippakam.com

புதிய சமதர்மம்

Registered as a news pa[illegible] in Sri Lanka



வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

## தமிழ் தொழிலாளி வர்க்கத்தின் பாதை எது?

இன்று சிங்கள பௌத்த பேரினவாதிகள் தொடுத்துள்ள மிகக் கொடிய யுத்தத்திற்கு எதிராக, தமிழ் தொழிலாளர் வலுவுடன் போராட வேண்டும். இல்லையேல் இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு மேலும் அழிவைக் கொடுக்கும். தமிழ் மக்கள் தமது இலக்கை அடைய வேண்டுமானால் அதற்கு நிச்சயம் தென் இலங்கை தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவு கிடைக்க வேண்டும். இதற்காக தமிழ் தொழிலாளி வர்க்கம், தென் இலங்கை தொழிலாளர் இடையே கடும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, வரலாறு முழுவதும் சிங்கள வலதுசாரி பிரிவினருடனே உறவாடியது. மேலும் சொல்லப் போனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் அன்றும், இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் உறவாடுகிறது. கடந்த 23 வருட காலமாக இவ் இரு கட்சிகளுமே தமிழ் மக்கள் மீது கோரமான யுத்தத்தைத் தொடுத்து வந்துள்ளன.

1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பின் மாபெரும் மக்கள் சக்தி அணி திரண்டது. இப்பெரும் சக்தியின் துணையுடன் மக்களின் போராட்டத்தைச் சர்வதேச மயப்படுத்தி தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பேரினவாத கட்சிகளின் பின் நின்று உறவாடி காலத்தை விரயம் ஆக்கினர்.

தற்போது ஆயுதப் போராட்டமே சரியான வழி என்று கூட்டணியினர் கூறித் திரிகின்றனர். இதுவா தமிழ் மக்களுக்கு கூட்டணியினர் காட்டும் பாதை? ஆயுதப் போராட்டத்தால் மாத்திரம் தமிழ் மக்களின் விடுதலையைப் பெற்றுவிட முடியுமா?

தமிழ் தொழிலாளி வர்க்கம் தனது வரலாற்று கடமையை மறந்து விட முடியாது. எனவே தென் இலங்கை தொழிலாளி வர்க்கத்திடையேயும், முற்போக்கு சக்திகள் மத்தியிலும், தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்ட செய்திகளைக் கொண்டு செல்ல வேண்டும். இதன் மூலம் ஏற்படும் ஐக்கியத்தினால், சிங்கள பௌத்த பேரினவாதிகளின், கொலை வெறியைத் தடுத்து விட முடியும்.

சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்கள் சார்பான அனுதாப அலைகள் தோன்றும், இந்த காலக் கட்டத்தில், தென் இலங்கை தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைப் பெறுவது மிகவும் அவசியமானதாகும். இந்த நாட்டின் வலது சாரிகள் பலமுறை ஒற்றமையாக செயற்பட்டுள்ளனர். இப்போதும் அவர்கள் ஒற்றுமையாகவே உள்ளனர்.

எனவே தமிழ் தொழிலாளி வர்க்கம் தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக சகல பங்களிப்பையும் வழங்க வேண்டும். இதன் மூலமே தமிழ் மக்கள் தமது சுதந்திர பாதையில் தெளிவுடன் முன்னேற முடியும்.

## குப்பைகளை அகற்ற முடியாத நிலையில் மாநகரசபைகள்

அண்மையில் இலங்கை முழுவதுமுள்ள மாநகர சபைகளின் நகர பிதாக்கள், மாநாடு ஒன்றை நடத்தியுள்ளனர். இவர்களின் மாநாட்டில் பல்வேறு குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக மாநகர சபைக்கு போதிய அதிகாரங்கள், இல்லாது இருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி போன்ற பெரிய மாநகர சபைகள் குப்பைகளை கொண்டு போய் போடுவதற்கு இடம் இல்லாமல் திண்டாடுவதாக தெரிய வருகிறது. ஏற்கனவே கொழும்பு தாநகரப் பகுதிகள் குப்பைகளால் நிறைந்து வழிகிறது. புதிதாக ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையால், கொழும்பு மாநகர சபை போன்ற மாநகர சபைப் பகுதிகளில் குப்பைகள் நிறைந்து வழிய வாய்ப்பு ஏற்படப் போகிறது.

இலங்கையில் உள்ளூராட்சி சபைகள் அரசியல் பிரசாரத்துக்காக மாத்திரமே இயங்குகின்றனர். வரியிறுப்பாளர்களின் வசதிகளுக்காக எத்தகைய செயற்பாடுகளும் அவர்களிடத்தில் இப்போது உள்ளது. புதிய கட்டிடங்களைக் கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவழித்து கட்டுவதும் அவற்றை அதி முக்கிய அமைச்சர் ஒருவரைக் கொண்டு திறந்து வைப்பதுமே அவைகளின் இலக்காக உள்ளது.

கிறான்பாஸ் பகுதியில் உள்ள வடிகால்களில் தேங்கி வழியும் கழிவு நீரை அகற்றுமாறு அப் பகுதி மக்கள் கொழும்பு மாநகர சபையைக் கேட்டும், இன்று வரை கழிவு நீர் அகற்றப்படாமலே உள்ளது.

தெஹிவளை பிரதான வீதிகளில் இறந்த நாய் ஒன்றை சாக்கினுள் இட்டு, தெஹிவளை மாநகர சபைக்கு 25 யார் தூரத்தில் போடப்பட்டு இருந்தது. இதைப்பற்றி மாநகர சபை கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இறந்த நாயும் சாக்கும், மழைகள், கொழுத்தும் வெயில் என்பவற்றையெல்லாம் கடந்து, தற்போது நாயின் எலும்புகளு[...] அந்த சாக்கும் பிரதான பாதை[...] யில் உள்ளது.

ஒரு கால கட்டத்தில் வடக்[...] கிழக்குப் பகுதியில் பல உள்ளூ[...] ராட்சி சபைகள் மிகவும் திறமை[...] யாக இயங்கின.

அவை யாவும் இன்று குண்டு[...] தாக்குதல்களினால் சிதற[...] போய் உள்ளன. சாவகச்சே[...] தகரசபை இலங்கையில் மிக[...] சிறந்த நகர சபைகளில் ஒன்[...] அங்கே இன்று பிணக்குவியலே[...] கிடக்கும். ஆனால் அல[...] மௌலானா, அனுராதபுர நக[...] சபையை மாநகர சபையா[...] தரம் உயர்த்தி உள்ளார்.

அரச பிரமுகர்களுக்கு விழு[...] எடுக்கும் அரசியல் குப்பைக[...] ளாகவே இன்று உள்ளூராட்[...] சபைகள் உள்ளன. எனவே கு[...] பைகளை அகற்றமுடியாது மா[...] கர சபைகள் திண்டாடுவது வி[...] த்திரமானதல்ல. ஏன் என்றா[...] அரசியல் குப்பைகள் தேங்கி[...] நிலையிலேயே உள்ளூராட்சி சபைகள் உள்ளன.

## கேள்விக்குறியாகி உள்ள இந்திய கிரிக்கற்[...]

இந்திய கிரிக்கற் விளையாட்டின் கதாநாயகர்களாகக் கருதப்பட்ட, ஏன் கடவுள் நிலையில் நினைக்கப்பட்ட கபில்தேவ், அசாருதீன், ஜெடேஜா, கவஸ்கர், மனோஜ் பிரபாகர், ஆகியோரது வீடுகள் சோதனைக்கு உள்ளாகி உள்ளன. மேற்படி வீரர்கள் ஊழலில் ஈடுபட்டமைக்கான சான்றுகள் தம்மிடம் இருப்பதாக இந்திய புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கோடிக்கணக்கான இந்திய ஏழை மக்களை ரசிகர்களாகப் பெற்றிருக்கும் இந்த கிரிக்கற் நாயகர்கள் செய்துள்ள மோசடிகள் கணக்கிலடங்காதவை. இந்திய கிரிக்கற் விளையாட்டின் தரம் தற்போது உலக அரங்கில் மிகவும் கீழ் நிலைக்குச் சென்றுள்ளது. தமது மோசடிகளை மறைப்பதற்காக, இந்திய கிரிக்கற் தலைவர்கள் வேறு துறைகளில், தமது மூக்கை நுழைத்ததும் யாவருக்கும் தெரியும். குறிப்பாக கார்கில் பிரச்சினையில் கபில்தேவ் இந்தியா முழுவதும் நிதி சேகரித்து வந்ததும் யாவருக்கும் தெரியு[...]

இலங்கை கிரிக்கற்றில் கூ[...] எதிர்காலத்தில் குழப்பங்க[...] தோன்ற வாய்ப்பு உண்டு. இ[...] ங்கை கிரிக்கற் அணியின் மு[...] னாள் தலைவர், அருச்சுனா ரண[...] துங்காவை அடுத்த தேர்தலி[...] வேட்பாளராக இறக்குவதற்[...] சிங்கள உறுமையா இயக்க[...] முயன்று வருகின்றது. சிங்க[...] உறுமையா இயக்கத்தின் கூ[...] டத்திற்கு அருச்சுனா சென்[...] வந்தது யாவருக்கும் தெரியும்[...]

## அரைகுறை அரசியல் தீர்வை ஆதரித்து துரோகத்தனம் செய்யாதீர்

– மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன்

அரசாங்கம் தற்போது கொண்டு வந்திருக்கும் தீர்வுத் திட்டம் அவசரப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தை ஆராய்வதற்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்படவில்லை. மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் இத் தீர்வுத் திட்டத்தில் இடம் அளிக்கவில்லை. எனவே இத் தீர்வுத் திட்டத்தை ஆதரிக்க முடியாது இருக்கிறது என ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நோர்வே அரசு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடனும், அரசுடனும், பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அத்தகைய முயற்சிகள் எல்லாம் இப்போது இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த அறிக்கையில் வரலாற்று ரீதியாக பல அரசியல் திட்டங்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கங்கள் வைத்துள்ளன என்றும் ஆனால் அவை யாவும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக அமையவில்லை. எனவே இந்த அரசியல் திட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரத்தத்தை உறையச் செய்யும் செய்திகள்

1. ஒட்சிசன் இன்றி 9 வயது சிறுமி மல்லாவியில் பரிதாப மரணம். இது போன்று மேலும் பல மரணங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என வைத்திய கலாநிதி யமுனானந்தா தெரிவித்துள்ளார்.
2. மொரட்டுவ பல்கலைக்கழக மாணவன் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டார்.
3. இடம்பெயர்ந்து இந்தியா சென்ற குமுதினி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.
4. மருத்துவ சிகிச்சைக்காக வவுனியா வந்த ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த வீரகத்தி செல்லத்துரை மடுவில் உயிர் நீத்தார்.
5. மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினர் கண்டபடி சுட்டதால் 22 அப்பாவி பொதுமக்கள் உயிரிழப்பு
6. நீர்வேலி கரந்தனை, 70 வயது மூதாட்டியை இராணுவத்தினர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளனர். மூதாட்டியின் சொத்துக்களையும் கொள்ளையடித்துள்ளனர்.
7. யூலை 18, மேரி வனிதா என்ற தாய் இந்தியாவுக்கு தப்பிச் செல்லும் போது இந்திய மீனவர்கள் கடலில் தள்ளியதால் 7 வயது மகனைப் பறி கொடுத்துள்ளார்.
8. யூலை 13, கொக்குவில் தலையாளி பகுதியில் இந்துக்கல்லூரி மாணவன் என். சஞ்சிவன் இராணுவத்தின் துப்பாக்கி சூட்டினால் பலியானார்
9. யூலை 14, மாலிச் சந்தி இராணுவ சோதனைச் சாவடியில் பாடசாலை மாணவி இராணுவத்தினரின் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்.
10. வடமாராட்சி வல்வைப் பகுதியில் 80 வயது மூதாட்டி பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்

## தமிழ் சுதேச வைத்தியர்களும் புலிகளா?

அண்மையில் சுதேச வைத்தியர்களாக இருப்பவர்களுக்கு சமாதான[...] நீதிபதி பதவி வழங்கி கௌரவிக்கும், வைபவம் ஒன்று, மிகச் சிறப்பான முறையில் கொழும்பில் நடந்துள்ளது.

ஆனால் இந்த வைபவத்தில் ஒரு தமிழ் சுதேச வைத்தியருக்குக் கூட சமாதான நீதிபதி பதவி வழங்கப்படவில்லை.

இலங்கையில் அனைத்து துறைகளிலும் இனவாதம் ஊடுருவி உள்ளது. இன்று சுதேச வைத்திய துறைக்குள்ளும் அது பரவியுள்ளது.

படிப்பகம்